FRIENDS MISSIONARY PRAYER BAND

# சீக்கர்ஸ்

Vol 25-Issue 01 - Jan - 2025
A monthly Prayer Bulletin for
**Youth & Teens**

for young
friends of fmpb



# வெற்றியோடு துவங்குவோம் வா!

Private circulation only

# கூடார முற்றத்தின் வேலி
# THE COURTYARD FENCE

Rev. Selvinraj G Charles

இஸ்ரவேல் புத்திரரின் மத்தியில் தேவன் வாசம் பண்ணும் ஸ்தலமாக பழைய ஏற்பாட்டிலே ஆசரிப்புக் கூடாரம் இருந்தது (யாத்திராகமம் 25:8). இந்த ஆசரிப்புக் கூடாரத்தை பிதாவானவர் வனாந்தரத்தில் மோசேயிடம் ஒரு ஆசரிப்புக் கூடாரத்தை கட்டவும், அதன் மாதிரியும், அதை எந்த பொருளினால் செய்ய வேண்டும் என்றும், அது எந்த அளவு இருக்க வேண்டும் என்றும் யாத்திராகமம் 25-27 வரையுள்ள அதிகாரத்தில் தெளிவாக சொல்கிறார். ஆசரிப்புக் கூடாரம் ஒரு பரிசுத்த ஸ்தலம். அங்கு பிதாவான தேவன் வாசம் செய்து தம் மக்களைச் சந்திக்கும் வாசஸ்தலமாக இருக்கிறது. இரவும் பகலும் தேவனுடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் தங்கியிருக்கிறது.

### கூடாரம் ஒரு சாட்சியின் வாசஸ்தலம் (The Tabernacle is the dwelling place of a Witness):

இது ஒரு சாட்சியின் வாசஸ்தலம், அதாவது இதில் உடன்படிக்கை பெட்டியும், பத்து கற்பனைகளும் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. இது இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டு, நமக்குள்ளே வாசம் பண்ணின காரியத்திற்கு நிழலாய் இருக்கிறது (யோவான் 1:14).

### முற்றத்தின் வேலி (Yard Fence):

இந்த ஆசரிப்புக் கூடாரத்தின் ஒரு பகுதிதான் முற்றத்தின் வேலியாகும். ஆண்டவர் இந்த ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒரு முற்றத்தை உண்டாக்கினார். அதில் தென்புறம் மற்றும் வடபுறம் 100 முழ நீளமும், மெல்லிய துணியால் செய்யப்பட்ட திரைச்சீலையும், 20 தூண்களும், 20 வெண்கல அடித்தளங்களும் இருந்தது. முற்றத்தின் மேற்கு முனையானது 50 முழ அகலமும், திரைச்சீலையும், 10 தூண்களும், 10 அடித்தளங்களும் மற்றும் கிழக்கே சூரியன் உதயத்திற்கு நேராக முற்றம் 50 முழ அகலமும் இருந்தது. இது 75 அடி அகலம் மற்றும் 150 அடி நீளம் கொண்ட பகுதியாகும்.

### முற்றத்தின் வேலியின் நோக்கங்கள் (Purposes of a Yard Fence):

வேலி பல நோக்கங்களுக்காக சேவை செய்கிறது. முதலாவது இந்த வாசஸ்தலத்தில், பரிசுத்த ஸ்தலத்தின் முகப்பின் மற்ற ஸ்தலத்தை நெருங்கவோ அல்லது முற்றத்திற்குள் நுழையவோ முடியாது. மேலும் இந்த முற்றத்தின் வேலியின் முக்கியத்துவம் என்னவென்றால், எகிப்தியர்களால் வணங்கப்படும் சிலைகள் அல்லது கானானிலுள்ள மற்ற பொய்யான கடவுள்கள் போன்ற பிராந்திய கடவுள் அல்ல என்று கடவுள் தனது மக்களுக்கு இதன் மூலம் காட்டினார். யெகோவா தம் மக்களோடு வாழ்கின்றார். அவருடைய வல்லமை எல்லா இடங்களிலும் பரவுகிறது. ஏனென்றால் அவர் மட்டுமே உண்மையும், துதிகளில் வாசம் செய்யும் கர்த்தருமாவார். இந்த ஆசரிப்புக் கூடார முற்றத்திலும் அவர் பிரசன்னம் உண்டு.

### முற்றத்தின் வேலி ஒரு பாதுகாப்பு (Yard Fence Security):

முற்றத்தின் வேலி என்பது வாசஸ்தலத்திற்கு ஒரு பாதுகாப்பு எல்லையாக இருக்கிறது. அதுபோல் நாமும் தேவனை உதடுகளின் பலியாகிய துதியை ஆண்டவருக்கு செலுத்தும் போது அவர் நம் எல்லையைப் பாதுகாத்து ஆசீர்வதிக்கின்றார்.

### முற்றத்தின் வேலியில் மெல்லிய வெள்ளைத் துணி (Thin white cloth on the Yard Fence):

முற்றத்தின் வேலியிலுள்ள துணி மெல்லிய வெள்ளைத் துணியால் நிறைந்திருந்தது. இந்த மெல்லிய வெள்ளைத் துணி கடவுளைச் சுற்றியிருக்கும் நீதியைக் குறிக்கிறது. அதுபோல் நாமும் பரிசுத்தமுள்ள, நீதியுள்ள தேவனைப் பரிசுத்த அலங்காரத்தோடு தொழுது கொண்டால், அவர் நிச்சயம் நமக்கு நீதியைச் செய்வார். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியான தியாகத்தால் நாம் சுத்திகரிக்கப்படாவிட்டால் பாவம் கடவுளிடமிருந்து இந்த வேலியைப் போல நம்மைப் பிரித்துவிடும்.

இந்த பஞ்சு நூலினாலான மூடுதிரை கிறிஸ்துவின் நீதியைக் குறிக்கிறதாயிருக்கிறது. அது சபையில் உள்ளே, வெளியே இருக்கிறவர்களையும், அவர்களுடைய மனுஷீக நீதியின் வித்தியாசத்தைக் கொண்டு பிரிக்காமல், சபையின் உள்ளே இருக்கிறவர்களின் வித்தியாசம் கிறிஸ்துவின் நீதியினாலே தரிப்பிக்கப்பட்டதினாலே உண்டாகிறது என்பதைக் காண்பிக்கிறது. ஆகவே நாமும் இந்த புதிய ஆண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்துவின் நீதியைத் தரிப்பித்துக்கொள்ள, அவர் மகிமை இரவும், பகலும் நிறைந்திருக்கிற இந்த ஆசாரியக் கூடாரத்தில் வந்து ஆண்டவரைத் துதிப்போம் வாருங்கள்.

**அன்பு தம்பி, தங்கையே மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை வைத்து, நீயாக துதிக் குறிப்புகளை உருவாக்கி, துதித்துப் பழகு!**



**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.**

## VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266



**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**


ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில் | - 6 |
| Fellowship Lunch | - 7 & 9 |
| டிஜிட்டல் மோசடி | - 15 |
| தெரிஞ்சுக்கோ... புரிஞ்சுக்கோ... | - 19 |
| வாசற்படி | - 22 |




# உங்கள் வெற்றியுள்ள வாழ்க்கைக்கு

கிறிஸ்துவில் என் பிரியமான இளம் உள்ளங்களுக்கு! வெற்றி வேந்தன் இயேசுவின் நாமத்தில் இனிய புது வருட நல்வாழ்த்துக்கள்!

பவுல், 2 கொரிந்தியர் 2:14 ல் **"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்".** கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த பூமியில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், காரணம் கிறிஸ்துவின் மூலம் நாம் மரணத்தின் மீது வெற்றி பெற்று கிறிஸ்துவுடன் இணைந்து வாழ்வதால் நீதிமான் என்று அழைக்கப்படுவதோடு அவருடைய பிள்ளை என்ற நிச்சயத்தையும் பெற்றுள்ளோம். ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையையும், சந்தர்ப்பங்களையும் அறிந்திருக்கிறார்.

ரோமானிய போர் வீரர்கள் போரில் வெற்றி பெற்ற பின் தனது நாட்டிற்கு வரும்போது, தனது எதிரி நாட்டின் கைதிகளை ஊர்வலமாக அழைத்து வருவதோடு, போரில் கிடைத்த பொருட்களையும் காட்சிப்படுத்துவார்கள். மேலும் வெற்றியின் அடையாளமாகத் தூபத்தை எரிக்கும் போது அந்த நறுமணம் எல்லா இடங்களிலும் பரவி மணம் வீசும். இதைப் போன்று நம்முடைய வாழ்விலும் கிறிஸ்துவின் நறுமணத்தை நாம் எல்லா இடங்களிலும் வெளிப்படுத்த வேண்டும்.

இந்த புதிய ஆண்டில் நாம் வசிக்கின்ற, படிக்கின்ற, வேலைச் செய்கின்ற மற்றும் ஊழியம் செய்கின்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்துவின் வாசனையை நாம் வீசச் செய்யும் போது, நிச்சயமாக கிறிஸ்து நம்மை வெற்றி சிறக்கப் பண்ணுவார். இந்த புதிய ஆண்டை கிறிஸ்துவின் உதவியால் வெற்றியோடு ஆரம்பிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

இந்த ஆண்டு நமது இளைஞர் பிரிவுக்கான நோக்க வார்த்தை "மிஷன் 25". இதே தலைப்பின் கீழ் 12 மாத கேரீத் உங்கள் கைகளில் தவழும் என்பதை சந்தோஷத்தோடு பகிர்ந்துக் கொள்ளுகிறேன். "மிஷன் 95" என்று 30 ஆண்டுகளுக்கு முன்பு நாகர்கோவிலில் வைத்து நடைபெற்ற முகாம் மற்றும் அதற்கு முந்தைய ஐந்தாண்டு திட்டம், அதைத் தொடர்ந்து பல மாவட்டங்களில் மூன்று நாள் மற்றும் ஒரு நாள் கூடுகைகள் நடைபெற்றதின் மூலம் அநேக மிஷனெரிகள் நம் இயக்கத்தில் இணைந்தனர். அதைவிட தேவையுள்ள இந்நாட்களில் மீண்டும் அதே நோக்க வார்த்தையோடு இந்த ஆண்டைத் துவங்குவோம்.

ஐந்தாண்டு திட்டத்தின் செயல் திட்டங்களை வரும் இதழில் பகிர இருக்கிறோம். உங்கள் அனைவரின் ஜெபம் மற்றும் ஒத்துழைப்பை எதிர் நோக்குகிறோம்.

"ஆயிரமாய் பெருகுவோம்
ஆயிரம் மிஷனெரிகளை பணியமர்த்துவோம்"

என்ற தாரக மந்திரத்துடன் 2025 -ம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி

# துதி ஊழியம் -சேத்



புத்தாண்டு வந்தாச்சு, நம்ம கவலையெல்லாம் போயாச்சு என்றது அந்த தாய் ஒட்டகம். ஆமா, ஆமா அதெல்லாம் சரிதான், ஆனா அந்த ஆண்டவர் ஏன் தான் என்னை இப்படி படைச்சாரோ? எனக்கு என்னையே பிடிக்கல என்று சலித்துக் கொண்டது அந்த குட்டி ஒட்டகம். ஏன் அப்படி சொல்ற என்ற தாயிடம், என் கண்ணை பாரு இவ்வளவு தடியான இமை அசிங்கமாக இருக்கிறது என்றது. அது பாலைவன புயலிலிருந்து கண்களை காப்பாற்ற ஆண்டவர் அப்படி வைச்சிருக்காரு. அப்ப என் கால பாரு, விரிச்சி, நல்லாவே இல்ல என்றது. நம்ம மணல்ல நடக்கிறப்ப உள்ள போகக் கூடாதுல அதான் அப்படி ஆண்டவர் படைச்சிருக்காரு. சரி, அப்ப ஏன் என் முதுகுல இவ்வளவு அசிங்கமான திமிளை வச்சுருக்காரு. அதுவா அது தண்ணியே இல்லாத பாலைவனத்துல தண்ணியை சேர்த்து வைக்க ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிறாரு என்ற தாயிடம் அப்ப ஏன் நாம Zoo-ல கூண்டுக்குள்ள இருக்கோம்? என்றது அந்த குட்டி ஒட்டகம். எனக்கன்பான தம்பி, தங்கச்சி புதிய ஆண்டை இனிதே துவங்கியுள்ள நாம், நம்மைப் படைத்த ஆண்டவரின் நோக்கத்தை அறிந்து, அதை நிறைவேற்ற வாழ்கிறோமா? என்பதே இன்றைய தலைமுறையினருக்கான தலையாய கேள்வி. சேத் என்கிற மனிதனின் வாழ்க்கையிலிருந்தும், அவனுடைய தலைமுறையினரின் தெரிந்தெடுப்புகளிலிருந்தும் சில வேத சத்தியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## 1. தேவனால் நியமிக்கப்பட்ட சந்ததி:

ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தில் காயீன், ஆபேல் என்ற இரண்டு சகோதரர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் வாசிக்கும்போது. அவர்களுடைய வாழ்க்கை முறை, தேவனோடு கொண்டிருந்த உறவு, அவர்கள் செலுத்தின முதல் காணிக்கை, அதனால் சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பகை, அதுவே விரோதமாக மாறி முதல் கொலையில் முடிந்ததையும் வேதம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. அதன் பின் காயீனுடைய சந்ததியின் 10 தலைமுறைகளைக் குறித்து நாம் காண முடியும். இந்த சந்ததியினர் தேவனுக்குப் பயமில்லாத சந்ததியினராய் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரமாக ஆதியாகமம் 4:23-ல் பத்தாம் தலைமுறையினனான லாமேக்கு தன் மனைவிகளிடத்தில் தன் வாழ்க்கையைக் குறித்து தானே சாட்சி சொல்வதைக் காண முடியும். 24-ம் வசனத்தில் அவன் இவ்வாறு கூறுகிறான், "காயீனுக்காக ஏழுபழி சுமருமானால், லாமேக்குக்காக எழுபது பழி சுமரும் என்றான்.

ஆம்! பிரியமான தேவப்பிள்ளையே, தேவனுக்கும் அவருடைய வழிகளுக்கும் சம்பந்தமே இல்லாத ஒரு சந்ததி உருவாகி பூமியை ஆக்கிரமிக்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது. எதிர்கால உலகம் எவ்வாறு உருவாகுமோ என்று நாம் எண்ணும்போதே 26-ம் வசனம் நமக்குள் நம்பிக்கை துளிர்க்கும் செய்தியை கொண்டு வருகிறது. காயீன் கொலை செய்த ஆபேலுக்கு பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று ஏவாள் அவனுக்கு சேத் என்று பெயரிட்டாள். சேத் என்பதற்கு, "பதிலாக அல்லது நியமிக்கப்பட்ட" என்று அர்த்தம். அதாவது தேவனால் நியமிக்கப்பட்டவன், அவன் தேவனுக்கென்று நியமிக்கப்பட்டவன் என்று நாம் கருத முடிகிறது. நாமும் தேவனால் நியமிக்கப்பட்ட சந்ததியாக இருக்கிறோம். எனவே தேவனுக்கென்று வாழ நம்மை ஒப்புக்கொடுப்பது அவசியமாகும். நமது வழிகளை ஆராய்ந்து பார்த்து ஆண்டவருக்குள், அவருக்கென்று நம்மைத் திடப்படுத்திக் கொள்வோம்.

## 2. தேவனை அறிவிக்கும் சந்ததி:

ஆதியாகமம் வேதத்தின் முதல் புத்தகம் மட்டுமல்ல, உலகத்தில் உண்டான முதல் மனிதன், முதல் ஓய்வு நாள் போன்ற முதன் முதல் தோற்றினவைகளை உள்ளடக்கிய புத்தகம். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல முதல் காணிக்கையும், முதல் இரத்த சாட்சியும் இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் முதல் வாக்குத்தத்தமும் ஆதியாகமம் 3:15-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பாவத்தில் விழுந்துபோன மனுக்குலத்தை மீட்க ஆண்டவர் சற்றும் தயங்காமல், தாமதிக்காமல் வாக்குத்தத்தம் செய்கிறார். ஆனால் சேத்தின் வழித்தோன்றல்களே ஆண்டவரைத் தேடும் கூட்டமாக வேதத்தில் தென்படுகின்றனர். மேலும் ஆதியாகமம் 4:26-ன் பின்பகுதியில் "...அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்"

என்று குறிப்பிடுகிறது. ஆங்கில மொழிப்பெயர்ப்பில், "... At that time men began to call on the name of the Lord". (NIV) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு இன்னும் ஒரு படி மேலே சென்று "...At that time men began to proclaim the name of the Lord" என விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே தேவனை அறிந்தவர்களாக மட்டுமல்ல, அறிவிக்கிற கூட்டமாக இருந்தனர் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. தேவனை அறிந்து கொள்வது ஆவிக்குரிய வாழ்வின் முதல் நிலை அல்லது ஆரம்பம் என்றால் அவரை அறிவிப்பதே ஆவிக்குரிய வாழ்வின் நிறைவு அல்லது பூரணம் ஆகும். சேத்தின் சந்ததியினர் ஆண்டவரை அறிவிக்கும் கூட்டமாய் வாழ்ந்தனர். தேவனுக்கு எதிரிடையாக வாழ்ந்த காயீனின் புத்திரரின் நடுவே தேவனை அறிவிக்கும் கூட்டமாய், சந்ததியினராய் வாழ்ந்தார்கள் என வேதம் கூறுகிறது. நாமும் நம்மைச் சுற்றியிருக்கும் மக்களுக்கு ஆண்டவரை அறிவிக்கும் கூட்டமாய் வாழ்கிறோமா? என்பதை சிந்திக்க வேண்டும். அவரை அறிவிப்பதில் தான் நமது ஆவிக்குரிய வாழ்வின் பூரணத்தை அனுபவிக்க முடியும்.

## 3. தேவனை விட்டு விலகின சந்ததி:

சேத்தின் சந்ததியைக் குறித்து ஆதியாகமம் 5-ம் அதிகாரம் முழுவதும் நாம் வாசிக்க முடியும். தேவனுக்கு விரோதமாக வாழ்ந்த கூட்டத்தின் நடுவே, தேவனுக்கு அஞ்சி, தேவனைத் தேடி, அவரையே சேவிப்பவர்களாய் வாழ்ந்த சேத்தின் சந்ததியினர் எவ்வாறு விழுந்து போனார்கள் என்பதை 6-ம் அதிகாரம் நமக்குக் கற்றுத் தருகிறது. தேவனால், தேவனுக்கென்றுநியமிக்கப்பட்டசேத்தும்,அவன்சந்ததியினரும் தேவனோடு எத்தகைய நெருங்கின உறவு கொண்டிருந்தனர் என்பதை அவனுடைய சந்ததியில் ஒருவனாகிய "ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான்" என்ற வசனத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும். அவ்வாறு தேவனோடு நெருங்கியத் தொடர்பிலிருந்த இந்த சேத்தின் சந்ததியினர் 6-ம் அதிகாரத்தில் தேவனுடைய புத்திரர் என்று அடையாளப்படுத்தப்பட்டனர். தேவனுக்கென்று தங்களை நியமித்து, அவரை அறிவிக்கும் கூட்டமாக அடையாளப்படுத்தினவர்கள், காயீனின் சந்ததியினரின் வழிக்கு நேராய் திரும்பி, சோரம் போனார்கள் என வேதம் குறிப்பிடுகிறது. "தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துக்கொண்டார்கள்" (6:2பி). ஆண்டவரும் தனது அங்கலாய்ப்பை "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" என்று 6:6-ல் வெளிப்படுத்துகிறார். தேவனுக்கென்று தங்களை முன்நிறுத்தினவர்கள் தேவனை விட்டு விலகி சென்றதன் விளைவு, மனக்குலமே அழிவுக்குத் தள்ளப்பட்டது.

அருமையான தம்பி, தங்கச்சி தேவன் உன்னை படைத்து, உனக்கென வாழ்வைப் பரிசளித்திருக்கிறார். உன்னுடைய வாழ்வின் நோக்கத்தை எங்கோ தேடிக் கொண்டிருக்கிறாயா? ஆண்டவரிடம் கேள், அவர் அதை உனக்கு வெளிப்படுத்துவார். தேவனைத் துதிப்பதற்கு நியமிக்கப்பட்ட சேத்தின் சந்ததி, அவரை அறிவித்த அவனின் கூட்டம் இறுதியில் மனுக்குலத்தையே அழிவுக்கு நேராக நடத்துவதற்கு காரணமாகிப் போனார்கள். நாமும் நம்முடைய வழிகளை ஆராய்ந்து, அவர் நமக்கென தந்த இந்த வாழ்க்கையை அவருக்கென அர்ப்பணித்து ஊழியம் செய்ய முன்வருவோமா? அதுவே ஆண்டவருக்காக நீங்கள் செலுத்தும் பூரண துதியாக இருக்கும்.





# நான் ஏன் ஜெபிக்கணும்?

Mrs. Jeba Saral

ஆதி காலத்தில் தேவன் ஆதாம், ஏவாளைப் படைத்து அவர்களோடு உலாவி பேசி மகிழ்ந்தார். பாவம் உள்ளே புகுந்த போது அவ்விதமான ஐக்கியம் தொலைந்து போனது. இதனை மீண்டும் கொண்டுவர தேவன் தன் ஒரே சொந்த மகனை இவ்வுலகத்திற்கு அனுப்பி மனிதனை மறுபடியும் தன்னோடு இணைந்து வாழ வழி வகுத்தார். இரண்டாம் வருகையில் கூட நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் அவரோடு வாழ, நம்மை நியமித்திருக்கிறார். இவ்விதமாக தேவன் தாம் உண்டாக்கின மனிதரிடமிருந்து முதலாவது எதிர்பார்ப்பது நம்மோடு தொடர்பு கொண்டு பேசி மகிழ்வது தான். அதனால் தேவன் உன்னை படைத்திருக்கிறார் என்றால் நீ முதலாவது தெரிந்துக் கொள்ள வேண்டிய உண்மை, *"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது"* (சங்கீதம் 139:16). For Example, எப்படி ஒரு பிள்ளை எவ்வளவு பெரிய கூட்டத்திலும், தன் தகப்பனையோ தாயையோக் காணும்போது தன்னையே அறியாமல் சிரித்துக்கொண்டே அவர்களிடம் செல்கிறதோ, அதுபோலத்தான் நாமும் இருக்க வேண்டும். நம்மை உண்டாக்கின தேவனை அனுதினமும் தேடவேண்டும்!!!

நீங்கள் கேட்கலாம், தேவனுக்கு என்னுடைய கஷ்டம், தேவைகள் எல்லாம் ஏற்கனவே தெரியும், அவர்தான் என்னை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறாரே, நான் ஏன் அவரை மறுபடியும் தேட வேண்டும்??? என்றும், வேறு தெய்வங்களைத் தேடும் மற்றவர்களும் என்னைப் போல இல்லாமல், என்னைவிட பணக்காரர்களாக, சந்தோஷமாகத்தானே இருக்கிறார்கள். அப்பொழுது நான் ஏன் தேவனைத் தேட வேண்டும்???? என்கிறோம். தேவனைத் தேடுதல் என்பது உன் தேவைகளுக்காகவோ, உன் கஷ்ட நஷ்டங்களை போக்குவதற்காகவோ மட்டும் அல்ல. முதலாவது தேவனிடம் நாம் கொள்ளும் அன்பினால் தான், அவரைத் தினமும் தேடுகிறோம். எப்படி, உனக்கு யாராகிலும் பிடித்திருந்தால், அவர்களோடு நீ நிறைய மணி நேரம் செலவிடனும், அவர்களோடு பேசனும் என்று ஆவலாயிருப்பாய் அல்லவா, அதுபோல தேவன் மீதுள்ள அன்பினால், நீ தேவனைத் தேடுகிறாய். நீயும் தேவனும் உரையாடும்போது அவரோடுள்ள உறவு அதிகரிக்கிறது. அதனால் எவ்வளவு பெரிய புயல் உன்னைச் சூழ்ந்து கொண்டாலும், நீ விசுவாசத்தோடு, அமைதியாகவும், தேவன் கொடுக்கும் சமாதானத்தோடும் இருப்பாய். நீ ஜெபித்தாலும், ஜெபிக்காவிட்டாலும் சரி, உனக்கு ஆசீர்வாதங்கள், நீ நினைக்கும் காரியங்களை அடைதல் என்பது உனக்கு நடந்துக் கொண்டே தான் இருக்கும். *அதனால் தேவனை நீ தேடுவது உலக காரியங்களுக்காக மட்டும் தான் என்னும் எண்ணத்தை நீ விட்டுவிட்டு, அவரோடு உள்ள உன் உறவை மேம்படுத்திக் கொள்ளத்தான் நீ தேவனைத் தேடுகிறாய் என்பதை மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.* இயேசப்பாவும், அவருடைய சீஷர்களும் ஜெபிக்க கெத்செமனே சென்ற போது, இயேசு, *"ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா"* (மத்தேயு 26:40) என்று கேட்கிறார். அவர்கள் ஜெபித்தாலும் ஜெபிக்காவிட்டாலும் இயேசு சிலுவையில் அறையப்பட போகிறார். ஆனாலும் இயேசு அவர்களைப் பலப்படுத்த, சோதனைகளிலிருந்து தப்பிக்க ஆண்டவரிடம் பேசச் சொல்லுகிறார். So, *நீ பேசுவதால் அவர் மகிழ்கிறார். ஆனால், அவருக்கு எந்த பிரயோஜனமும் இல்லை, நீ அவரிடம் பேசுவதால் உனக்கு மட்டுமே பிரயோஜனம். இந்த உலக வாழ்க்கையை நீ ஜெயத்துடன் முடித்து அவரோடு பரலோகத்தில் வாழ வேண்டும் என்றால் அவருடைய பெலன் தேவை. அதற்கு தான் நீ தேவனோடு பேசுகிறாய்,* நீ மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய அடுத்த point. அப்போ, கண்டிப்பாக தேவனைத் தேடணும். - Ok, அக்கா ஆனால், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்பதன் அர்த்தம் (1தெசலோனிக்கேயர் 5:17) என்ன??? என்று நீ கேட்கலாம், அதற்கு எப்போதும் நாம் ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதல்ல, எப்போதும் நீ live location-ல் தேவனோடு இணைந்திருக்க வேண்டும். Current location-ல் உன்னைத் தேடச் சொல்லவில்லை!!! ஏனென்றால் நீ current location-ல் தேவனைத் தேடி விட்டு, வேறு இடத்துக்குச் சென்ற பின், அவருக்குப் பிரியமில்லாததைச் செய்தால், அதை தேவன் விரும்பமாட்டார். உன்னைப் படைத்தவரை உனக்குப் பிடித்திருந்தால், அவரில் நீ அன்பாயிருந்து அவரை live location-ல் தேடு!!!

*நீ தேவனின் அன்பை உணர்ந்து, அவரைத் தேட வேண்டும் என்று, நான் உனக்காக ஜெபித்துக் கொள்கிறேன்.*

*இதுபோல கேள்விகள் உனக்கு இருக்குமாயின், அதை எங்களுக்குத் தெரியப்படுத்தத் தயங்க வேண்டாம். வரும் மாதங்களில் நாம் அதை deal பண்ணிக்கலாம்.*

உங்கள் கேள்விகளை எங்கள் முகவரிக்கோ அல்லது எண்ணிற்கோ அனுப்பி வையுங்கள்!!!



# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)

**சத்தியன்:** டேய் சாதுரியன் நம்ம **group**-ல இந்த சீதனப்பட்டி **location**-யை **share** பண்ணிட்டியா?

**சாதுரியன்:** **group**-ல போட்டுட்டேன், பார்த்தானுங்களானு தான் தெரியல. (மற்ற இரண்டு பேரும் வந்துவிட்டனர்) ஏண்டா லேட்?

**விஷயம்:** உங்களுக்கு என்னடா சனி, ஞாயிறு-னா ஜாலி. எங்களுக்கு அப்படியா, அந்த இரண்டு நாள் தான் வேலையே. (உணவகத்திற்கு செல்கின்றனர்)

**ரகசியம்:** டேய் சத்தியன் எங்க இருந்துடா இந்த மாதிரி கடையை பிடிக்கிறீங்க? "மாமியார் வீட்டு விருந்து உணவகம்"

**சத்தியன் :** அதெல்லாம் நம்ம சாதுரியனை தான் கேக்கணும்.

**சாதுரியன்:** **Last week** எங்க **office team**-வோட **lunch**-க்கு இங்க வந்தோம். **Super Place** எல்லா **food**-ம் சூப்பராயிருக்கும்.

**விஷயம்:** **Already** மாமியார்-மருமகள் பிரச்சனை **peak**-ல போய்கிட்டுயிருக்கு. இதுல இங்கேயுமா?

*(ஒவ்வொருத்தருக்கும் தனித்தனியாக தலை வாழை இலையை* ***server*** *வைக்கிறான்)*

**சத்தியன்:** இந்த இலையைப் பார்த்ததும் எனக்கு எங்க மாமியார் வீட்டில் போட்ட முதல் விருந்து தான் ஞாபகத்திற்கு வருது.

**சாதுரியன்:** ஆமா எங்க மாமியார் வீட்டிலேயும் வேற **level**-ல கவனிச்சாங்க.

**விஷயம்:** ஏன்டா விருந்துன்னு சொன்னவுடனே உங்க மாமியார் மட்டும் தான் உங்களுக்கு ஞாபகம் வருது. உங்க அம்மாவும், உன் **wife**-க்கு மாமியார் தானே ! அவங்க உங்களுக்கு தலைவாழை விருந்து போட்டதேயில்லையா? மாமியார் கொடுமைனா முதல்ல ஆண் வீட்டுக்காரர்களைத் தான் பார்க்க வேண்டியது. ஏன்? பெண் வீட்டுக்காரங்க கொடுமை பண்ண மாட்டாங்களா?

*(மற்ற மூவரும்:* ***Ohhhh*** *மாமியார் கொடுமைக்கும், மாமியார் விருந்துக்கும் இவ்வளவு இருக்கா...* ***Ok***

*ரகசியம்: சரி* ***tension*** *ஆகாத (ஏன்பா வெயிட்டர் ஆர்டர் எடுப்பா !)*

*(****Waiter:*** *சார் மட்டன் பிரியாணி, சிக்கன் பிரியாணி, மட்டன் சுக்கா, சிக்கன் 65, மட்டன்ல தலைக்கறி, மூளை,* ***liver*** *பிரை)*

**விஷயம்:** டேய் சாதுரியன் இங்கே என்னடா நல்லா இருக்கும்?

*(அதற்கு சாதுரியன்: மட்டன் பிரியாணி சூப்பராயிருக்கும்)*

**விஷயம்:** அப்ப 4 மட்டன் பிரியாணி எல்லாருக்கும் ஓகேவா? பிரியாணி **ok, side dish** என்ன ஆர்டர் பண்ணலாம்?

*(****Waiter:*** *சார், நம்ம கடையில இன்னைக்கு* ***special*** *தலைக்கறி, மூளை வருவல்)*

**ரகசியம்:** சரி அந்த 2-லையும் ஒவ்வொரு **plate** கொண்டு வாங்க.

**சத்தியன் :** மூளை-னு சொன்னதும் ஒன்னு ஞாபகம் வருது. அது என்னன்னா "**Brain Rot**" (மூளை சிதைவு). இது இப்ப **Trend**-ல இருக்கிற **Digital syndrome.** இன்னைக்கு இருக்கிற எல்லா **youngster**-க்கும் இந்த பிரச்சனையிருக்குது. ரொம்ப நேரம் **screen**-யை பார்த்துக்கிட்டேயிருக்கிறதுனால நம்ம **brain**-ல சிதைவு ஏற்படுகிறது. **Most of the time screen**-ல வரது எல்லாம் **50-90 content** தான். அது **YouTube shorts,** இல்லைனா **Instagram reels**-ன்னு இந்த **short clips**-அ தள்ளி மணிக்கணக்கில் பார்க்கிறதுதான் மூளைச் சிதைவுக்கு **important reasons.** உண்மையிலே அதற்கு பெயர் "மூளை அழுகல்".

**சாதுரியன்:** டேய் என் பொழுப்பே இந்த **screen**-ன வச்சு தான் **work from home**-ஆ இருந்தாலும் **full**-ஆ **screen** முன்னாடி தான் உட்கார்ந்த மாதிரி இருக்குது. அப்ப எனக்கு **Brain Rot** இருக்குமா?

**விஷயம்:** உனக்கு **Brain Rot** எல்லாம் வரதுக்கு வாய்ப்பே இல்லை. நீ தான் **working for home** தானே பண்ற. இவன் கம்பெனிக்கு ஒர்க் பண்றது விட வீட்டு வேலையை தான் கரெக்டா செய்வான்.

**சாதுரியன்:** சரி **company secret** எல்லாம் வெளியில சொல்லக் கூடாது.

**சத்தியன் :** **IT**-ல வேலை பார்க்கிறவங்களுக்கு எல்லாம் **sugar, BP, Cholesterol** தான் வரும். கூடவே **Brain Rot**-யும் வரும். சும்மா ஜோக் பண்ணலடா. பிரச்சனை என்னன்னா ரொம்ப நேரம் இந்த சின்ன வீடியோ கிளிப்ஸ் தொடர்ந்து பார்க்கறதுனால நம்ம **brain**-னோட **frontal lobe weak** ஆகிடும். அப்படி ஆச்சுனா **brain**-ல இருக்கும் **lymph system**-க்கு அதிகமான **neural circulation** போகும். இப்படி நாள் கணக்கில் நடக்கும் போது **frontal lobe complete**-ஆ **out** ஆயிடும். (ரகசியம்: **waiter** கத்திரிக்காவும், ரைத்தாவும் கொண்டு வாங்க)

**விஷயம்:** டேய் எங்கேயாவது புரியிற மாதிரி பேசுரியா?

**சத்தியன் :** சரி கோபப்படாத. **Frontal lobe**-ன் வேலை என்னன்னா யோசிக்கும் சக்தி, அறிவாற்றல், அன்பு, பரிவுனு நல்ல குணமும் இதில் தான் இருக்குது. அப்படியே கோபம், எரிச்சல், குழப்பம், பயம், சோம்பல் எல்லாம் **lymph system**-த்தின் வேலை. மூளைச் சிதைவுக்கு முக்கிய காரணமே **frontal system failure** தான். இதனால்தான் இயல்பாக யோசிக்க முடிவதில்லை, குழப்பமான

-இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்



# அபிஷேக ஊழியம் -சாமுவேல்

Rev. Daniel Gnanapragasam

தேவனுடைய இராஜ்ஜியம் இப்பூமியில் கட்டப்படுவதற்கும், அவருடைய சித்தம் நிறைவேற்றப்படுவதற்கும் கர்த்தர் தமக்கென்று சிலரை தெரிந்துக் கொண்டார். அவர்களை ராஜாக்களாக, ஆசாரியர்களாக, தீர்க்கதரிசிகளாக, நியாயாதிபதிகளாக, மன்றாடும் ஊழியர்களாக, தலைவர்களாக தெரிந்துக் கொண்டு தம் ஆவியினால் நிறைத்து அபிஷேகித்தார். "சாமுவேல் தைலக் கொம்பை எடுத்து அவனை (தாவீதை) அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்..." (1சாமுவேல் 16:13).

எப்ராயீம் மலை நாட்டைச் சேர்ந்த எல்க்கானாவின் ஒரு மனைவி அன்னாள். அவளுக்கு குழந்தை இல்லை. ஆனால் ஆண்டுதோறும் சீலோவுக்கு சென்று ஆண்டவரை வழிபடவும், பலி செலுத்தவும் தவறாத குடும்பம். மலடி என்ற குறைபாட்டோடு, அழுது ஜெபித்த அன்னாளை ஆண்டவர் கண்டார். கடவுள் பக்தியும், நம்பிக்கையும் கொண்ட தன் பிள்ளைகளை ஆண்டவர் ஒருபோதும் கைவிடமாட்டார். ராஜாக்களையும், தலைவர்களையும் அபிஷேகிக்கும் தீர்க்கன் சாமுவேல் பிறப்பார் என்ற ஆண்டவரின் வாக்குறுதி அழுது கொண்டிருந்த அன்னாளிடம் பலித்தது.



**சாமுவேலின் பங்களிப்பு:**

சமஸ்த இஸ்ரவேலின் கூட்டாட்சி முறையிலிருந்து, மன்னராட்சி முறைக்கு பெரும் பங்கு வகித்தவர் இந்த சாமுவேல். மூன்று உலக மார்க்கங்களிலும் இவர் ஒரு தீர்க்கனாக மதிப்பிடப்படுகிறார். இவர் முதல் தீர்க்கனாகவும், கடைசி நியாயாதிபதியாகவும் பணி செய்தார் (அப்போஸ்தலர் 13: 20, 24). மேலும் கடவுளின் வெளிப்பாடும், சத்தமும் அபூர்வமாக இருந்த காலத்தில் லேவி கோத்திரத்து சாமுவேல் சீலோவிலுள்ள ஆலயத்தில் ஆண்டவரின் தெளிவான சத்தத்தை அழைப்பாகப் பெற்றுக் கொண்டு தன்னை அர்ப்பணித்தான் (1சாமுவேல் 3:10). மனிதனைச் செயல்பட வைக்கும் கடவுளின் சக்தியே இந்த அபிஷேகம். இந்த அபிஷேக வல்லமையால் கடவுளின் ஆளுமையை வெளிக்காட்டி தன் பங்களிப்பை சிறப்பாக நிறைவேற்றினார்.

- சமஸ்த இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலை அபிஷேகித்தல் (1சாமுவேல் 10:1).
- தாவீது ராஜாவை அபிஷேகித்தல் (1சாமுவேல் 16: 13).
- சாமுவேல் தீர்க்கனால் அபிஷேகம் செய்யப்பட்ட இந்த இரண்டு இராஜாக்கள் மீதும் தேவ ஆவியானவர் வந்திறங்கினார் என்று காண்கிறோம். இது கடவுளின் அங்கீகாரத்தையும், ஆளுமை அதிகாரத்தையும் பறைசாற்றுவதாக காணப்படுகிறது.

**இரண்டு வகையான அபிஷேகங்கள் இதில் உண்டு**

1. காணப்படுகிற ஒரு நிலை (Visible Stage).
2. காணப்படாத ஒரு நிலை (Invisible Stage).

சகல மனிதர்களின் கண்கள் காண இவர்கள் இருவரையும் சாமுவேல் தீர்க்கன் பிரதிஷ்டை செய்தது அல்லது அபிஷேகித்தது முதல் பகுதி அல்லது முதல் நிலை. அதே நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் வந்து இந்த இரண்டு பேரிடமும் இறங்கிய அனுபவம் காணப்படாத கண்களுக்கும் புலப்படாத ஒரு நிலை. அவர்களுக்குள் இருந்து ஆவியானவர் நடத்துவார். எனவே சாமுவேலின் அபிஷேக ஊழியம் தேவனுடைய பணி. அதைத் தன் மனுஷ பெலத்தால் செய்ய முடியாது. தேவ தயவாலும், இரக்கத்தாலும் மட்டுமே இப்பணியைச் செய்ய முடியும்.

**அபிஷேக தைலத்தின் ஐம்பொருளும், அதின் சாயலும்:**

பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்களை அபிஷேகம் செய்யும்போது தேவனால் கற்பிக்கப்பட்டபடியே தயாரிக்கப்பட்ட விசேஷ அபிஷேகத் தைலம். இது ஐந்து முக்கிய பொருள்களைச் சேர்த்து உருவாக்கப்பட்டது (யாத்திராகமம் 30: 23-25).

**1. வெள்ளைப் போளம்:** இது ஒரு மரப்பிசின், மரத்தை கூரிய ஆயுதத்தால் கிழிக்கும்போது கிடைக்கும் இதை, கண்ணீரின் ஜெபத்திற்கு ஒப்பிடலாம். சாந்தம் என்ற சுபாவமாக சமர்ப்பணம் செய்வதாகும். சாந்தம் என்பது பலவீனம் அல்ல, பணி செய்வதற்கான தெய்வ பெலமாகும்.

**2. சுகந்த கருவாப்பட்டை:** 30 முதல் 40 அடி உயரம் வரை வளரும் ஒரு மரத்தின் பட்டை. எந்த வளைவும் இல்லாது வளரும், நறுமணம் வீசும் நற்கந்தம். கிறிஸ்துவின் சுபாவத்தை நேர்மை என்ற பொருளோடு, சத்தியம் என்று சுபாவத்தோடு ஒப்பிடுவது (எபேசியர் 5:2).

**3. சுகந்த வசம்பு:** சதுப்பு நிலங்களில் வளரும் ஒரு வகையான நாணல், வளைந்து கொடுக்கும் ஒரு புல் வகை, மனத்தாழ்மை என்ற சுபாவத்தோடு ஒப்பிடப்படுகிறது. இது அபிஷேகம் செய்யப்பட்ட மனிதனின் வாழ்வில் வரவேண்டிய ஒரு குணம்.

மேலும் பகுத்தறிந்து பல பாஷைகளைப் பேசவும், பல பாஷை பேசும் மாந்தர்களை வழி நடத்தவும் அருளப்படுகிறது.

**4. இலவங்கப் பட்டை:** மரத்திலிருந்து உரிக்கப்பட்ட ஒன்று, இது சுத்திகரிப்பு என்ற சுபாவத்தின் அடையாளம். நம் வாழ்வில் தடையாக இருக்கும் சுபாவங்களைக் களைய வேண்டும். ஜாதி, மதம், குலம், கோத்திரம் என்று தோலுரித்த அடையாளமாக மனுஷீகம் வெளிவந்து தெய்வீகம் உள் வர வேண்டும்.

**5. ஒலிவ எண்ணெய்:** இறைபிரசன்னத்தால் நிரம்புதல், நான்கு வகையான சுகந்த வர்க்கங்களுள் இந்த ஒலிவ எண்ணையும் இணைந்து உருவாக்கப்பட்டது. இந்த அபிஷேக தைலம், இந்த ஐந்து குணலட்சணங்களும் உள்ளடக்கப்பட்ட இந்த வாழ்வு முறை (Priestly Order) ஒரு கனமான ஊழியம், ஒரு பரிசுத்தமான ஊழியம், ஒரு அழைக்கப்பட்ட ஊழியம், அர்ப்பணிக்கப்பட்ட ஊழியம், பிரித்தெடுக்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டு, பிரத்தியேகமாக வாழ ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தை தீர்க்கன் சாமுவேல் சிறப்பாக செய்தார்.

**அபிஷேகத்தின் மூன்று பிரமாணங்களும், நன்மைகளும்:**

- சரீரத்தின் மேல் ஊற்றப்படக்கூடாது.
- தலை வஸ்திரத்தின் மேல்தான் ஊற்றப்பட வேண்டும்.
- இதற்கு ஒப்பான இன்னொரு தைலம் உருவாக்கப்படக்கூடாது (போலி தைலம்).

சவுல் தைலக் குப்பியில் ஊற்றப்பட்டிருந்த ஒலிவ எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டார். தாவீது பெரிய கொம்பிலே நிரப்பப்பட்டிருந்த ஒலிவ எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டார். ஆகவே அவர்கள் மேலிருந்த அபிஷேக வல்லமையில் வித்தியாசமிருந்தது. மேலும் ஆண்டவர் ஒரு புதிய அபிஷேக தைலத்தைக் குறித்து சொல்லும்போது, அது ஆனந்த தைலம் என்று சங்கீதம் 45:7, ஏசாயா 61:3, எபிரெயர் 1:9-ல் குறிப்பிடுகிறார். சவுல் அபிஷேக ஊழியம் செய்திருந்தாலும், உண்மையாக அபிஷேகித்தவர் பரிசுத்த ஆவியானவரே. அவர் இறங்கி வந்து வரங்களினால் நிரப்பி, ஆளுகை செய்து தம் திட்டத்தை நிறைவேற்றினார்.

- "என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங்கீதம் 23:5) என்ற வசனத்தின்படி நிரம்பி வழியும் பாத்திரமாக மாற்றினார்.
- காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவார் (சங்கீதம் 92:10)
- காயம் ஆற்றும் எண்ணெய்ப் போல காயம் கட்டுவார் (லூக்கா 10:34).
- எரிந்து பிரகாசிக்கும் விளக்காக விளங்கச் செய்வார் (யோவான் 5:35).

**தம்பி, தங்கை நாம் நம்முடைய சரீரமாகிய மண்பாண்டத்தில் மகிமையின் ஆவியானவரை, மாசற்ற மகிமையாகப் பெற்றிருக்கிறோம். அதை நீ அனல் மூட்டி எழுப்பி, பயனுள்ளப் பாத்திரமாக வாழ்வதோடு மட்டுமல்லாமல், இந்த தேசத்திற்கு தேவையான தலைவர்களையும், மிஷனெரிகளையும் உருவாக்கும் முன்னேற்றப்பணியில் உன்னை இணைத்து ஊழியம் செய்ய வா.**

7-ம் பக்கத்தின் தொடர்ச்சி

## இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

சூழ்நிலையில் சமாளிப்பதற்கும், பதட்டப்படாமல் முடிவெடுப்பதற்கும் முடிவதில்லை.

**விஷயம்:** டேய் நீ சொல்ற இது எல்லாமே youth-க்கு equal-ஆ பெரியவங்களுக்கும் இருக்குது.

**சத்தியன் :** உண்மைதான், இப்ப எல்லாம் Social media-ல வயது வித்தியாசமே இல்லை. சின்னதுலயிருந்து, பெரியவங்க வரை எல்லோரும் அடக்கம். (சாதுரியன்: வேறு ஏதாவது ஆர்டர் சொல்வோமா?)

*(Waiter: சார் என்ன வேணும்? கருப்பட்டி பாயாசம் இருக்கு.) (சாதுரியன்: நாலு கப் கொண்டு வாங்க) சரிடா இதுக்கு என்னதான் தீர்வு?*

**விஷயம்:** முதல்ல screen time-யை கம்மி பண்ண வேண்டும். Daily walking, running and basic exercise செய்கிறது, book read பண்றது. ஏதாவது எழுதுவதுன்னு பண்ணினா கண்டிப்பா Brain Rot-ல இருந்து வெளில வந்துடலாம்.

**ரகசியம்:** டேய் இந்த வார்த்தைதான் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தினர் (The word of year 2024) ஒரு சிறு வாக்கெடுப்பை உலகம் முழுவதும் எடுத்ததில் 37,000 பேர் இதற்கு ஓட்டு போட்டிருக்கிறார்கள். அதனால் தான் Brain Rot - The word of year 2024 இந்த வார்த்தை 1854-ல் ஹென்றி டேவிட் தோராவால் அவரது புத்தகமான வால்டன்-இல் எழுதப்பட்டது.

*சத்தியனும், சாதுரியனும் ஒரே குரலாக: ஏன்டா இவ்வளவு ரகசியங்களைத் தெரிஞ்சி வச்சிக்கிட்டு ஒன்னுமே தெரியாதமாதிரி நடிக்கிற.*

**ரகசியம்:** அதுவும் ஒரு கலைதான். (பாயாசம் வந்து சேர, அதை நால்வரும் கையில் எடுத்துக் கொண்டு)

**விஷயம்:** டேய் சத்தியன் இதற்கு ஏதாவது Solution சொல்லு நாம புறப்படலாம்.

**சத்தியன்:** இதற்கு இரண்டு Dose தரேன். அதை காலையிலும், இரவும் 21 நாள் எடுத்துக்க.

*ஒன்று: நீதிமொழிகள் 4:20-27, இரண்டு: ரோமர் 8:5 -17.*
*(சாப்பிட்டதற்கு பணமும், வெயிட்டருக்கு டிப்ஸ்-ம் கொடுத்துவிட்டு செல்கின்றனர்)*

**சாதுரியன்:** டேய் விஷயம்அடுத்த மாதம் நம் fellow ship lunch-க்கு சூப்பர் ஹோட்டலா செலக்ட் பண்ணி வை.



# வட இந்திய மிஷனெரிப்பணி ஆரம்பம்...

PRAYER POINTS - FMPB FIELD

Mrs. Mercy Deborah

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வட இந்திய ஊழியப்பணியின் ஆரம்ப நாட்கள் அது, 1971-ல் உத்திர பிரதேசத்திலுள்ள பஸ்தி என்ற இடத்தில் ஆரம்பித்தோம். இது இந்தியாவிலேயே அதிக ஜனத்தொகைக் கொண்ட மாநிலம். இம்மாநிலத்தில் சுமார் 24 கோடி மக்கள் உள்ளனர். சிறிதும் பெரிதுமான 32 நதிகளைக் கொண்ட, இந்து மத புண்ணிய ஸ்தலங்கள் நிரம்பிய மாநிலம்.

## திருச்சபை, ஊழியங்கள்:

1556-ம் ஆண்டு முதல் 1605 வரை அக்பர் ஜெஸ்யூட் மிஷனெரிகள் மூலம் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1852-ல் ஆங்கிலிக்கன் மிஷனெரிகளும், 1858-ல் மெத்தடிஸ்ட் மிஷனெரிகளும் இங்கு ஊழியம் செய்து சபைகளை ஸ்தாபித்தனர்.

## உத்திரப்பிரதேசத்தில் நமது ஊழியம்:

- 1971-ல் வட இந்தியா உ.பி-யிலுள்ள பஸ்தியில் ஊழியத்தைத் துவங்கி வைத்த முதல் மிஷனெரிக் குடும்பம் மறைதிரு. ஹில்கியா, திருமதி. டெய்சி ஹில்கியா ஆவார். பிறந்து 20 நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை இழக்க நேர்ந்த போதும், பல பாடுகள் மத்தியில் துணிவுடன் ஊழியம் செய்தவர்கள்.
- சமார் இன மக்கள் மத்தியில் அவர்கள் செய்த ஊழியத்தின் விளைவாக அநேக திருச்சபைகளையும், ஏராளமான விசுவாசிகளையும் கர்த்தர் தந்தார்.
- 1975-ல் திரு. டி. பொன்னுசாமி, திருமதி. எஸ்தர் பொன்னுசாமி பஸ்தி அலுவலகத்தில் இணைந்தனர். 1976 ஆகஸ்ட் 15-ம் தேதி 7 பேர் திருமுழுக்கு பெற்றனர்.
- 1977-ம் ஆண்டு மறைதிரு. விக்டர் பாக்கியராஜ், ஜலுன் மாவட்டம் கால்பி என்னுமிடத்தில் ஊழியம் தொடங்கி, கான்பூர் ரூரல் மாவட்டத்தில் பிப்ரி கிராமத்தை மையமாக வைத்து பொக்கராயன் பணித்தளத்தை துவங்கினர்.
- 1979-ல் பஸ்தி விசுவாசி திரு. பீட்டர் ஹரிராம் ஊழியத்தில் இணைந்து ஒரு கலாச்சார மிஷனெரியானார்.
- 1982-ல் ரூரா பணித்தளம், 1990-ல் காட்டாம்பூர் அதைத் தொடர்ந்து பல பணித்தளங்கள் துவக்கப்பட்டன.
- தேவன் அநேகருடைய ஜெபத்தைக் கேட்டு, ஊழியர்களுடைய பிரயாசங்களைக் கனப்படுத்தி, ஆத்துமாக்களையும், சபைகளையும் திரளாய் தரவே பணி மையங்கள் விரிவுபடுத்தப்பட்டன.
- உத்திரப்பிரதேச மாநிலத்தில் இதுவரை தேவன் நமக்கு கொடுத்த விசுவாசிகள், ஆராதனைக் குழுக்கள், கட்டப்பட்ட ஆலயங்கள், அங்கு துவங்கப்பட்ட பணித்தளங்கள், ஊழியம் செய்த முன்னோடி மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் இவர்கள் மூலம் செய்யப்பட்ட ஊழியங்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.

## ஜெபிப்போம்

- உத்திரப்பிரதேச மாநிலத்தின் 1 ,07,452 கிராமங்களிலும் ஊழியங்கள் நடைபெறவும், சபைகள் மற்றும் ஊழியர்களைத் தேவன் எழுப்ப,
- இங்கு மதமாற்ற தடை சட்டத்தை தேவன் முறியடித்து போட,
- இங்குள்ள விசுவாசிகள், மிஷனெரிகள் மற்றும் சுதேஷ ஊழியர்களின் பாதுகாப்புகாக,
- மத அடிப்படையில் ஜனங்களை பிளவுபடுத்தும் தீய சக்திகளுடைய திட்டங்கள் நிறைவேறாது போக, போதை மருந்துகளை கடத்துவோர் மற்றும் விற்பனை செய்வோர் இத்தீய செயலிலிருந்து விடுபட,
- இம்மாநிலத்தில் வாழும் அனைத்து இன மக்களும் (யாதவ், ராஜ்புத், ஜாட், சமார், பஞ்சாரா, குப்தா, கோண்ட், கோர்வா) தேவனைக் கண்டு கொள்ள,
- பிரசவத்தின் போது உயிரிழப்பு, காசநோய், டைபாய்டு, புற்றுநோய் போன்றவைகளினால் ஏற்படும் உயிரிழப்புகளிலிருந்து காக்கப்பட,
- பில்லி சூனியம், மாயவித்தை மற்றும் மந்திர தந்திரங்கள் போன்ற பலவிதமான மூடநம்பிக்கைகளில் கட்டுண்டு கிடக்கும் ஜனங்கள் விடுதலைப் பெற ஜெபிப்போம்.




# சூரியன் உதிக்கும் நாடு (LAND OF THE RISING SUN)

PRAYER POINTS - NICK NAME COUNTRIES

Ms. Beulah Baskar

ஜப்பான் (Japan: 日本) ஆசியக் கண்டத்திலுள்ள பல தீவுகளாலான நாடாகும். இது பசிபிக் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் உள்ளது. இது சூரியன் உதிக்கும் நாடு என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் சீனாவிலிருந்து பார்க்கும்போது, சூரியன் ஜப்பானின் திசையிலிருந்து உதயமாகிறது என தோன்றும்படி அமைந்துள்ளது. இந்த புனைப்பெயர் ஜப்பானிய வார்த்தைகளான நிப்பான் மற்றும் நிஹான் ஆகியவற்றிலிருந்து வந்தது, இவை இரண்டும் "சூரியனின் ஆதாரம்" அல்லது "சூரியனின் தோற்றம்" என்று பொருள்படும்.

Tokyo இதன் தலைநகராகும். ஜப்பான் மொத்தம் 6852 தீவுகளை உள்ளடக்கியது. ஒக்கைடோ, ஒன்சூ, சிகொக்கு, கியூசூ ஆகியன ஜப்பானின் முக்கியமான மற்றும் 97 சதவீத நிலப்பரப்பை உள்ளடக்கிய நான்கு பெரிய தீவுகளாகும். ஜப்பானின் தலைநகரம் நியான் விளக்குகள், வானளாவிய கட்டிடங்கள், பாப் கலாச்சாரம் மற்றும் பலவற்றிற்கு பெயர் பெற்ற ஒரு பிரபலமான பயணயிடமாகும். மேலும் இது 12.6 கோடி மக்கள் தொகையுடன் உலகின் 11 வது இடத்தை பிடித்துள்ளது.

ஜப்பான் பல விஷயங்களுக்குப் பிரபலமாக உள்ளது, அவற்றுள்:

- கலாச்சாரம்: தேநீர் விழாக்கள், கையெழுத்து மற்றும் மலர் அமைப்பு போன்ற பாரம்பரிய கலைகள், ஜப்பானின் அழகிய தோட்டங்கள், சிற்பம் மற்றும் கவிதை ஆகியவற்றிற்காகவும் அறியப்படுகிறது.
- உணவு: ஜப்பான் Sushi-யின் பிறப்பிடமாகும், மேலும் அதன் பிற சமையல் சார்ந்த ஏற்றுமதிகளுக்கும் பெயர் பெற்றது.
- Fuji மலை: புஜி மலை ஜப்பானின் மிக உயரமான மலை மற்றும் புனித சின்னமாகும். இது யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாகவும் அமைகிறது. மேலும் ஒவ்வொரு கோடையிலும் மில்லியன் கணக்கான மக்கள் இதில் ஏறுகிறார்கள்.
- தொழில்நுட்பம்: புல்லட் ரயில்கள் மற்றும் ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பத்திற்கு ஜப்பான் பெயர் பெற்றது.
- பாப் கலாச்சாரம்: ஜப்பானின் Anime, Manga மற்றும் video games உலகம் முழுவதும் பிரபலமாக உள்ளன.
- பாரம்பரிய விளையாட்டு: பாரம்பரிய விளையாட்டான சுமோ ஜப்பானின் தேசிய விளையாட்டாக மதிக்கப்படுகிறது. தற்காப்புக் கலைகளாக Judo, Karate போன்றவைகளும் உள்ளன. கோல்ப் விளையாட்டு இங்கு ஒரு புகழ்பெற்ற விளையாட்டாகும். ஜப்பானிய மக்கள் கால்பந்து விளையாட்டை பெரிதும் ஈடுபாட்டுடன் விளையாடுகிறார்கள்.

ஜெபக்குறிப்புகள்:

- ஜப்பானில் இனம், மதம் அல்லது பாலினம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடுக்கும் சட்டங்கள் எதுவும் இல்லை. இங்கு தேசிய மனித உரிமைகள் நிறுவனம் இல்லை. சக மனிதர்களின் உரிமைகள் மற்றும் சுய மரியாதையைப் பாதிக்கும் வண்ணம் இல்லாமல் அவை பாதுகாக்கப்படும் வண்ணம் இத்தேச சட்டம் வடிவமைக்க பட ஜெபிப்போம்.
- ஜப்பானின் புகலிடம் மற்றும் அகதிகள் காப்பக அமைப்பு அங்கு வரும் நபர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதற்கு எதிராக வலுவான எதிர்ப்பைக் கொண்டுள்ளது. இந்நிலை மாறி அங்கு தஞ்சம் புகும் அன்னியர்களுக்குப் புகலிடம், பாதுகாப்பு மற்றும் பிற தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- குழந்தைத் திருமணத்தை திறம்பட முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் சிவில் சட்டத்தின் திருத்தப்பட்ட பிரிவு 731 நடைமுறைக்கு வந்த பின் பெற்றோரின் அனுமதியுடன், சிறுமிகள் திருமணம் செய்யக்கூடிய குறைந்தபட்ச வயதை ஜப்பான் அரசு 16 முதல் 18 ஆக உயர்த்தி இருக்கிறது. அதாவது 40 வயது ஆண், 16 வயது பெண்ணைக் கூட திருமணம் செய்து கொள்வது இங்கு வாடிக்கையாக உள்ளது. இந்த சட்டம் அர்த்தமற்றதாகவும், தீர்வு காணாததாகவும் இருக்கிற பட்சத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படாமல் பல நூற்றாண்டுகளாக அவர்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்துபவர்களாவே இருந்து வருகின்றனர். இந்நிலை மாறி பெண்களுக்கு அரசியல் மற்றும் மருத்துவ துறைகளில் சம உரிமைகள் வழங்கப்பட ஜெபிப்போம்
- தொழில் நுட்பத்திலும், பொருளாதாரத்திலும் இத்தேசம் வானளவில் உயர்ந்திருந்தாலும், இங்கு கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 1.1%-மாகவே காணப்படுகிறது. இங்கு சுவிசேஷத்திற்கு அடைக்கப்பட்டிருக்கும் வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.





# நான் இயேசுவுக்கு வேண்டும்



ஓய்வு பெற்ற மிஷனெரி Mr. A. முத்துமணி

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழச் செல்வனூர் என்ற கிராமத்தில் ஒரு பெயர் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். வருடத்திற்கு ஒருமுறை வரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு புத்தாடையிருந்தால் தான் ஆலயம் செல்லுவேன். P.U.C. படிக்கும் போதுதான் பைபிள் வாங்கி படிக்கவும், ஆலயம் செல்லவும் ஆரம்பித்தேன். ஒரு நாள் இந்து பின்னணியிலிருந்து ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, நான் படித்த கல்லூரியிலேயே B.Sc. படித்துக் கொண்டிருந்த ஒருவர் என்னைப் பார்க்க விடுதிக்கு வந்தார். ஒவ்வொரு மாதமும் கல்லூரியில் நடக்கும் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கூறிச் சென்றார். அதன்படி நான் கலந்துக்கொண்டதோடு, ஒரு சில இந்து மாணவர்களையும் அழைத்துச் சென்றேன். ஆனால் நான் இரட்சிக்கப்படவில்லை.

தீபாவளி விடுமுறை நாட்களில் மல்லாங்கிணறு என்ற இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு முகாமில் கலந்து கொண்டேன். அங்கு முதல் நாளில் பி. சாம் அண்ணன் செய்தியின் மூலம் ஆவியானவர் இடைப்பட்டு என்னை இரட்சிப்புக்கு நேராக நடத்தினார். அதே நாள் இரவில் Film Strip காட்டப்பட்டது. அதில் ஒரு ஆதிவாசி மனிதன் கந்தல் ஆடையோடு குரங்கை வேட்டையாடி சாப்பிட்டு கொண்டு இருந்ததைக் கண்டு மன வேதனை அடைந்தேன். இவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய எத்தனை பேர் ஆயத்தமாயிருக்கிறீர்கள் என்ற கேள்வி கேட்கப்பட்டது. நான் ஆதிவாசி மனிதனை நினைக்கும் பொழுதெல்லாம் ஜெபத்தில் அழுவேன். அப்பொழுது என் உள்ளத்தில் படிப்பு முடிந்தவுடன் ஊழியத்திற்கு புறப்படுவேன் என்று தீர்மானித்தேன்.

திண்டுக்கல் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்துக் கொண்டு தேர்வு செய்யப்பட்டேன். பின்பு நான் தூத்துக்குடியில் உள்ள மிஷனெரிப் பயிற்சி மையத்திற்கு அனுப்பப்பட்டேன். அங்கு ஒரு வருடம் அநேக பாடங்களை கற்றுக் கொண்டேன். பயிற்சியை முடித்த பின் ஊழியத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நாம் சாது சுந்தர்சிங் போல கிடைத்தால் சாப்பாடு இல்லை என்றால் பசியோடு ஊழியம் செய்வோம் என்று நினைத்திருந்த எனக்கு, முதல் மாத சம்பளமாக ரூ. 75/- பெற்றவுடன், ஊழியத்திலும் மாத சம்பளம் கிடைக்குமா என்று நினைத்து ஆச்சரியப்பட்டேன்.

அதன் பிறகு ஊழியத்தினிமித்தம் வட இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு, பீகார் மாநிலத்தின் (இன்றைய ஜார்கண்ட்) அடர்ந்த காட்டுப்பகுதியிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்து, மால்தோ மற்றும் சந்தால் மக்களில் சுமார் 23,000 பேரைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி, ஞானஸ்நானம் கொடுக்க தேவன் கிருபைச் செய்தார். இதுவரையிலுள்ள திருச்சபை வரலாற்றில், மால்தோ மக்களைப் போன்று கிராமம் கிராமமாக இயேசுவை ஏற்றுக் கொண்டதில்லையென்று திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

### ஜெபக்குறிப்புகள்:

- ★ அண்ணன் சென்ற அனைத்து இடங்களிலுமுள்ள மக்கள் இரட்சிக்கப்பட
- ★ இரட்சிக்கப்பட்ட மக்கள் பின்மாற்றமடையாமல், ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் பலப்பட
- ★ மிஷனெரி பணியிலிருந்து ஓய்வுப் பெற்று முதிர்வயதிலுள்ள அண்ணனின் சுகத்திற்காக
- ★ அனைத்து ஓய்வு பெற்ற மிஷனெரிகளின் சுகத்திற்காக ஜெபிப்போம்.

Rev. T.Y.P. Asir



# பார்வைத்திறன் குறைபாடு

மனித உணர் திறன்களிலேயே பார்வைத்திறன் மிக முக்கியமானது. வாழ்க்கையின் எல்லா கட்டத்திலும் அத்தியாவசியமான ஒன்று பார்வை. பார்வைத்திறன் குறைபாடு என்பது எதையும் முழுமையாகவோ, பகுதியாகவோ பார்க்க இயலாத ஒரு நிலையைக் குறிக்கிறது. பார்வைத்திறன் குறைபாடுகளில் பல வகைகள் உண்டு. அவற்றுள் பிறவி பார்வைத்திறன் குறைபாடு முதன்மையானது. பிறவி பார்வைத்திறன் குறைபாடு என்பது பிறக்கும்போதே பகுதியாகவோ, முழுமையாகவோ பார்க்க இயலாத தன்மையோடு பிறப்பது.

பார்வைத்திறன் குறைபாடுகள் ஏற்பட காரணம்:

1. **மரபணு கோளாறுகள் (GENETIC DISORDERS):** ரெட்டினிடிஸ் பிக்மென்டோசா (RETINITIS PIGMENTOSA) மற்றும் பிறவி கண்புரை (CONGENITAL CATARACTS) போன்ற சில பரம்பரை மரபணு கோளாறுகள் பிறவி பார்வைத்திறன் குறைபாடுகளை ஏற்படுத்தும். இந்த குறைபாடுகள் மூளை காட்சித் தகவலைச் செயலாக்கும் விதத்தைப் பாதிக்கலாம்.
2. **மகப்பேறுக்கு முந்தைய காரணிகள் (PRENATAL FACTORS):** கர்ப்ப காலத்தில் ஏற்படும் நோய்த்தொற்றுகள் (உதாரணத்திற்கு: டோக்ஸோபிளாஸ்மோசிஸ், ரூபெல்லா) வளரும் கருவின் கண்கள் அல்லது மூளைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். ரூபெல்லா என்பது பிறவி கண்புரை மற்றும் பிற கண் அசாதாரணங்களுக்கு ஒரு பொதுவான காரணமாகும்.
3. **முன்கூட்டிய பிறப்பு (PREMATURE BIRTH):** குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு வளர்ச்சியடையாத கண்கள் இருக்கலாம், இது RETINOPATHY OF PREMATURITY (ROP) போன்ற நிலைமைகளுக்கு வழிவகுக்கும், இதன் விளைவாக பார்வைத் திறன் குறைபாடு ஏற்படுகிறது, ஏனெனில் கண்களில் உள்ள இரத்த நாளங்கள் அசாதாரணமாக வளர்கின்றன.
4. **ஊட்டச்சத்து குறைபாடுகள் (NUTRITIONAL DEFICIENCIES):** வைட்டமின் ஏ குறைபாடு, FOLATE (வைட்டமின் பி9) குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் கர்ப்பம் அல்லது குழந்தைப் பருவத்தில் ஏற்படுகின்றன.

2024-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் சுமார் 8 மில்லியன் மக்கள் பார்வையற்றோராகவும், 62 மில்லியன் மக்கள் பார்வையில் குறைபாடுள்ளவர்களாகவும் உள்ளனர், அவர்களில் 24 மில்லியன் குழந்தைகள் பார்வையற்றவர்களாக உள்ளனர். இதன் அர்த்தம், உலகின் பார்வையற்றவர்கள் மற்றும் பார்வைக் குறைபாட்டில் உள்ளவர்கள் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் தான் உள்ளனர். மக்கள்தொகையில் பார்வையற்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏழ்மையான சூழ்நிலையில் வாழ்கின்றனர்.

**சவால்கள்:**

- பல கிராமப்புறங்களில் குழந்தைகளுக்கான கண் பராமரிப்புச் சேவைகள் மற்றும் திறமையான கண் மருத்துவர்கள் இல்லை.
- பார்வைத்திறன் குறைபாட்டை முன்கூட்டியே கண்டறிவது பெரும்பாலும் தவறவிடப்படுகிறது.
- வைட்டமின் ஏ உள்ளிட்ட சரிவிகித உணவின் அணுகுமுறை வறுமை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு போன்றவை பார்வைத்திறன் குறைபாட்டிற்கு முக்கிய காரணமாகிறது.
- பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் பெரும்பாலும் அறிகுறிகள் மற்றும் ஆரம்ப தலையீட்டின் அவசியத்தை அறிந்திருக்க மாட்டார்கள்.



கண்புரை அறுவை சிகிச்சைகள் மற்றும் கருவிழி மாற்று அறுவை சிகிச்சைகளில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், 2,00,000 கார்னியல் (CORNEAL) தேவைப்படும் இடத்தில், ஆண்டுக்கு 25000 முதல் 30000 மட்டுமே நன்கொடையாக கிடைப்பது சவாலாக உள்ளது.

**ஜெபக்குறிப்புகள்:**

- பொது இடங்களில் இவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் போக்குவரத்தில் சிறந்த உதவிகள் மற்றும் சம உரிமை கிடைக்கவும்
- இவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காகவும் மற்றும் மனசோர்வு நீங்கவும்
- இவர்களுக்கு ஆதரவளிக்கும் குடும்பத்தாருக்கு தேவன் பொறுமை, அன்பு மற்றும் இரக்கம் போன்ற குணங்களை அளிக்கவும், இவர்களைப் போன்றோர் தேவனுக்குள் பலப்படவும்
- பிறவி குறைபாடுகள் மூலம் பார்வையிழப்பைத் தவிர்க்கும் வகையில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைக் குறித்து அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மக்களுக்கு விழிப்புணர்வு முகாம்களை நடத்தவும்
- மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அலுவலகங்களில் குறிப்பாக ஏழைகளுக்கு பார்வையின்மைக்கான பல்வேறு காரணங்களைக் கண்டறிய இலவச கண் பரிசோதனை முகாம்கள் ஏற்பாடு செய்யவும்
- பார்வையற்றவர்களுக்காக அரசால் எடுக்கப்படும் திட்டங்கள் அவர்கள் இயல்பான வாழ்க்கை வாழ உதவும் திட்டங்களை அரசு செயல்படுத்துகிறது.



Dr. Godwin Issac & Dr. Azubha Jenilet

# பைகா மக்கள்

Mr. Suriya Kumar

பைகா என்றால் மந்திரவாதி என பொருள். மத்திய இந்தியாவில் உள்ள மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர் ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் 6,51,000 பேர் பரவி வாழ்கின்றனர். நிலத்தில் கலப்பைக் கொண்டு உழுவதை பூமி மாதாவின் மார்பைக் கிழிப்பதாக நினைப்பதால் உழவு செய்வதில்லை. பதிலாக குச்சிகளைக் கொண்டு குழி தோண்டி விதைக்கிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பழமையான விவசாய முறையை கைக் கொள்வதாலும், போதிய கல்வி அறிவு இல்லாதிருப்பதாலும், மக்கள் தொகை குறைந்துக் கொண்டிருப்பதாலும் இவர்களைக் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மக்கள் கூட்டம் Particularly vulnerable tribal groups (PVTGs) என அழைக்கின்றனர்.

கடவுள் தண்ணீர் மேல் மிதந்த இலையில் அமர்ந்திருந்தார். அவர் மண்ணைத் தேடினார். ஆனால் மண் கிடைக்கவில்லை. அதனால் மார்பில் இருந்து அழுக்கு மூலம் ஒரு காகத்தை உண்டாக்கினார். அந்த காகம் போய் ஆமையினிடத்தில் இருந்து மண் வாங்கி வந்தது. கொண்டுவரப்பட்ட மண்ணைத் தண்ணீரோடு கலந்துக் கடைந்து நிலத்தைக் கடவுள் உண்டாக்கினார். பின்னர் கடவுள் நங்கா பைகா (நிர்வாண ஆண்) என்ற ஆணையும் நங்கா பைகின் (நிர்வாண பெண்) என்ற பெண்ணையும் படைத்தார். இவர்களே பைகா மக்களின் மூதாதையர். தர்தி மாதா என்ற பூமி தெய்வம் இவர்களைப் படைத்ததாக நம்புகின்றனர். அதனால் தர்தி மாதா, மராதியோ, படாதியோ, நங்கா பைகா, நங்கா பைகின் போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். இவர்கள் மத்தியில் கிறிஸ்தவர்கள் வெறும் 0.23% மட்டுமே

பொதுவாக பெண்கள் தலைவாரிக் கொள்வதில்லை, மேலும் உட்கார்ந்திருக்கும் ஆண்களுக்கு முன்னால் நடந்து செல்வதில்லை. மாறாக பின்பக்கம் நடந்து செல்கிறார்கள்.

பச்சை குத்துவது இவர்களது பாரம்பரியங்களில் ஒன்று. பிறக்கும்போது, வாலிபப் பருவத்தை எட்டும் போது, திருமணத்தின் போது என தனித்தனியான நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு பச்சை குத்திக் கொள்கின்றனர். இது வெறும் அழகுபடுத்துவதற்கு மட்டுமல்ல, மாறாக தீய சக்திகளிடமிருந்து காப்பதற்கும், ஆவிக்குரிய நன்மைகள் கிடைப்பதற்கும் என நம்புகின்றனர்

பங்கோரியா என்ற காதல் பண்டிகையைத் தொடர்ந்து வாலிப ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்கின்றனர். பெரும்பாலும் பெற்றோர்கள் இதை ஆதரிக்கின்றனர். திருமணம் நடக்காவிட்டால் ஒரு பெண் பணியாளருக்கான செலவை ஆண், பெண் வீட்டாருக்கு கொடுக்க வேண்டும். மணமுறிவு ஏற்பட்டால் குழந்தை வளர்ப்பது பெரும்பாலும் பெண்ணாக இருக்கும். ஒருவேளை இரண்டு பேரும் வளர்க்க முன்வராவிட்டால் சமுதாயமே 15 வயது வரை வளர்க்கப் பாதுகாவலரை ஏற்படுத்தும்.

பைகா மக்கள் ஆஸ்ட்ரோ ஏசியா டிக் மொழிக் குடும்பத்தை சேர்ந்தவர்கள். ஆனால் இன்று அந்த மொழியைத் தொலைத்து விட்டனர். பக்கத்தில் வாழும் கோண்டி மொழி கலப்பான பைகினி என்ற ஒரு வகை சக்திஸ்கடி மொழி பேசுகின்றனர். ஹிந்தி மற்றும் மராட்டி போன்ற மொழிகளையும் இடத்திற்குத் தகுந்தபடி பேசுகின்றனர்.

## ஜெபியுங்கள்:

* சிருஷ்டிப்பின் கதையை நம்பும் பைகா மக்கள் சிருஷ்டிகரை அறிய ஜெபியுங்கள்.
* இவர்கள் மத்தியில் கல்வி அறிவு பெருக ஜெபியுங்கள்.
* வாலிபர்கள் மத்தியில் பாலுறவில் பரிசுத்தம் காண ஜெபியுங்கள்.
* சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத இம்மக்கள் மத்தியில் ஊழியர்கள் அனுப்பப்பட ஜெபியுங்கள்.
* பைகினி என்ற இவர்கள் மொழியில் வேதாகம கதைகள் மற்றும் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட ஜெபியுங்கள்.





### வளைக்குள் சிக்காதே

# டிஜிட்டல் மோசடி

## DIGITAL ARREST SCAM

Ms. Lily Reaiah Grace

Hello, International courier company-யிலிருந்து பேசுகிறோம் madam, China-விற்கு நீங்க அனுப்பியிருக்கிற Parcel வெளிநாட்டு பணம் மற்றும் போதைப் பொருட்களுடன் சிக்கியிருக்கு!

என்னது! நீங்க அனுப்பலையா? நீங்க அனுப்பாம எப்படி இந்த பார்சலில் உங்க ஆதார் கார்டு, பாஸ்போர்ட் இருக்கும், உங்க மேல FIR பதிவாகப் போகிறது, அதற்குமுன் விசாரணை நடத்த வேண்டும். மும்பை சைபர் கிரைம் போலீஸிடம் இருந்து உங்களுக்கு call வரும், ஒத்துழைக்கலைனா அடுத்து கைது, சிறை தான்...

HELLO, இது NARCOTICS CONTROL BUREAU- MUMBAI POLICE, நீங்க DIGITAL ARREST செய்யப்பட்டிருக்கீங்க. இந்த VIDEO CALL இணைப்பைத் துண்டிக்கக்கூடாது. உங்கள் சொத்து, வங்கி கணக்கில் உள்ள பணம் அனைத்தையும் சரிபார்க்க வேண்டும்!

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பெருகி, internet பயன்படுத்தாதவர் அரிதாக உள்ள இக்காலத்தில், இணையதளம் நம் வாழ்வை பல வழிகளில் எளிதாக்கியிருந்தாலும், பலரின் வாழ்வை கொல்லவும், திருடவும், அழிக்கவும் வரும் சாத்தானின் கருவியாகவும் பயன்படுகிறது. மேலே கொடுக்கப்பட்டுள்ள உரையாடல் நீலகிரி மாவட்டம் குன்னூரைச் சேர்ந்த 26 வயதான பெண் IT ஊழியர் ஒருவருக்கு வந்த அழைப்பின் சுருக்கம். இதில் அப்பெண் 16 லட்சத்தை இழந்துள்ளார்.

“டிஜிட்டல் கைது”, இதில் நூதன கொள்ளையர்கள், சட்ட அமலாக்க அதிகாரிகள் அல்லது அரசாங்க அதிகாரிகளைப் போல நாடகமாடி, உளவியல் ரீதியாக மிரட்டி தீவிர குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் கைது அல்லது சிறைத்தண்டனை போன்ற கடுமையான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக, பெரும்பாலும் பெருந்தொகையைச் செலுத்த தொடர் அச்சுறுத்தல்கள் மூலம், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பணம் பறிக்கிறார்கள். இப்படி கடந்தாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இணையதள மோசடிக்கு இந்தியா ரூ.11,333 கோடி இழந்துள்ளது. Citizen Financial Cyber Fraud Reporting and Management System-ன் (CFCFRMS) தரவுகள் படி, இந்தியாவில் 2024ல் மட்டும் கிட்டத்தட்ட 12 லட்சம் சைபர் மோசடி புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, நவம்பர் வரை பெங்களூரில் மட்டும் தினம் 48 வழக்குகள் என மொத்தம் 16,357 வழக்குகள் பதிவாகியுள்ளன. அதில் சில,

- “டிஜிட்டல் கைது” மற்றும் பங்கு வர்த்தக மோசடிகளுக்காக, பெங்களூருவாசிகள் 1,800 கோடியை இழந்துள்ளனர்.
- 17 நாட்களுக்கு “டிஜிட்டல் கைது” மூலம் ஹைதராபாத் குடும்பம் ரூ.5.5 கோடியை இழந்துள்ளது.
- நொய்டாவில் “டிஜிட்டல் கைது” செய்யப்பட்ட பெண்ணிடம் ரூ.1.40 லட்சம் மோசடி நடந்துள்ளது.
- “டிஜிட்டல் கைது” மூலம் குஜராத்தின் 90 வயது முதியவர், சி.பி.ஐ அதிகாரிகள் போல் காட்டி மோசடி செய்பவர்களிடம் ரூ.1 கோடி இழந்துள்ளார்.

Digital arrest என்றால் என்ன? என்று நம்மில் பலர் இப்போது தான் முதல் முறை கேள்விப்பட்டிருக்கலாம். இப்படி பெருகி வரும் இணைய வழி சைபர் கொள்ளைகள் பற்றி அறிந்து அதில் ஈடுபடுவோருக்காகவும், இக்குற்றங்களுக்கு இரையாவோருக்காவும் ஜெபிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

**ஜெபக்குறிப்புகள்:**

- இக்குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மனந்திரும்ப, பிடிபட்டு சீர்திருத்தம் அடைய...
- நம் தேச இளைஞர்கள் இவ்வழியில் செல்லாமல், நேர்மையான வழியில் முன்னேற...
- பாதிக்கப்பட்டவர்கள் இழப்புகளிலிருந்து மீண்டு மறுவாழ்வு பெற...
- குறிவைக்கப்படும் மக்கள் ஞானத்துடனும், விழிப்புடனும் செயல்பட...
- பாதிக்கப்படுவோர் தயக்கம் மற்றும் பயமின்றி அரசின் உதவியை நாட...
- காவல்துறை, சைபர் குற்றப்பிரிவு அதிகாரிகள் விரைந்து வழக்குகளை ஞானத்துடன் கையாள...
- தொழில்நுட்ப பாதுகாப்புகள் மற்றும் மேலும் கடுமையான தடை சட்டங்களை அரசு இயற்ற ஜெபிப்போம்.

# VIRAL NEWS

## ஜெபிக்கலாம் வா...



### விழுப்புரத்தில் வரலாறு காணாத மழை

சேதமடைந்த இடங்கள் சீரமைக்கப் பட ஜெபிப்போம்
இயற்கை சீற்றங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.







### Cyclone Fengal-Train transport and highway got blocked

புயல் / வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர்
மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்ப ஜெபிப்போம்.



### திருவண்ணாமலையில் மண் சரிவு

மண் சரிவில் 7 பேர் மரித்துள்ளனர். உயிர் சேதம் மற்றும் பொருள்
சேதமடைந்து வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.




### விவாகரத்தின் நிமித்தமாக தற்கொலை செய்து கொண்ட IT ஊழியர்

விவாகரத்து. தற்கொலைகளை தூண்டும்
சத்துருவின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.



### Syria Confronts New Future

உலக நாடுகளில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

### US ELECTION 2024 Trump Declares Victory

தேச / உலக தலைவர்கள் ஞானமாய்
தேவ ஆலோசனைப் பெற்று செயல்பட ஜெபிப்போம்.





Mr. Hutson & Mrs. Gifta

அன்று அவளுக்கு இருந்த பிரச்சினை மிகவும் கொடுமையானது. இன்றைய கால சூழ்நிலையிலும் மாதவிடாய் (Menstural) சிக்கல்கள் என்பது பெண்களுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பெரும் சவால்தான். Menstural Cycle ஏற்படுவதில் சிக்கல் ஆனாலோ அல்லது Cycle முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டாலோ அவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம் எந்த மனிதனாலும் தாங்க இயலாது. எப்படியாவது ஆண்டவராகிய இயேசுவைத் தொட வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த அந்த பெண்ணுக்கு 12 ஆண்டுகளாக Menstural Cycle முடிவடையவில்லை. முதல் மூன்று நற்செய்திப் புத்தகங்களிலும் இந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளில் நம் கவனத்தை ஈர்க்கும் வார்த்தை “பெரும்பாடு” “an issue” (KJV). “Rhusis” என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து “an issue” என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். Rhusis-யின் அர்த்தம் “A Flowing” - to flow / to run. இந்த ஆதாரங்கள் அவளுடைய உடல் உபாதையின் ஆழத்தை நமக்கு தெளிவுப்படுத்துகிறது. உடல் ரீதியாக அவளுக்கு இருந்த கஷ்டங்களை விட அன்றைய காலகட்டத்தின் சமூக அமைப்பும், நடைமுறையிலிருந்த விதிமுறைகளும் அவளுக்கு பெரும் சவாலாக இருந்தது. சமுதாயத்தில் அவளுக்கு எந்த இடமும் இல்லை. பொது இடங்களிலோ, குடும்ப அமைப்பிலோ வாழ்வதற்கு இவர்களுக்கு அனுமதி இல்லை. தீட்டு என்ற பட்டம் மட்டுமே மிச்சம்.

தன்னுடைய எல்லா நம்பிக்கைகளும் அற்றுப்போய் வேறு வழியில்லாமல் இருந்த அவளுக்கு இயேசு என்னும் மேசியாவைப் பற்றிய செய்திகள் அறிவிக்கப்படுகிறது. அந்த சங்கதிகள் உண்மையாக இருக்குமாயின், தனக்கும் நிச்சயம் சுகம் கிடைக்கும் என்பது அவளுடைய நம்பிக்கை. நாம் ஏற்கும் நம்பிக்கையின் உறுதி, நாம் எதிர்கொள்ளும் சவால்களை எப்படி கையாளுகிறோம் என்பதில் தான் இருக்கிறது. எல்லா வார நாட்களிலும் தீட்டானவர்கள் பொதுவெளியில் வருவதற்கு அனுமதி இல்லை. அப்படி அவள் பொதுவெளியில் வந்தாலும், அவள் கடைபிடிக்க வேண்டிய காரியங்கள் அதிகம்.

அவளுடைய மனதின் தீர்மானம் மேசியாவாகிய இயேசுவினுடைய துணியைத் தொட வேண்டும் என்பது மட்டும்தான். அவரைத் தொட வேண்டும் என்று நினைக்காமல் அவருடைய உடையைத் தொட்டுவிட வேண்டும் என்கிற அவளுடைய தீர்மானம் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இது ஒரு எதார்த்தமான செயல் என்று நாம் நினைக்கலாம். ஆனால் அவளுக்கு தான் பெற்றுக்கொள்ள போகிற சுகத்தின் திட நம்பிக்கையின் ஆதாரமாகயிருக்கிறது. மல்கியா 4:2 “என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும், அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்”

வேதாகமத்தில் பெருவாரியான செய்திகள் கவிதை நடையிலும், உருவகங்களாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு யூதனை நீங்கள் பார்த்தவுடன் நம்முடைய கவனத்தை ஈர்க்கும் காரியங்கள், அவன் தலையில் போட்டிருக்கும் தொப்பி (Keepa) மற்றும் அவன் அணிந்திருக்கும் உடையின் ஓரங்களில் இருந்த தொங்கல்கள். இந்த தொங்கல்கள் மாறாப்பிரமாணமாகவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (எண். 15:38-40). மேலும் ஜெபம் செய்யும் போது அவர்கள் Prayer Shawl பயன்படுத்துவார்கள். இந்த Shawl-ன் ஓரங்களில் தொங்கல்கள் இருக்கும். இந்த தொங்கல்களில் 7 நூல்கள் இருக்கும், 6 நூல்கள் வெள்ளை நிறத்திலும், 1 நூல் நீல நிறத்திலுமாக, இந்த 7 நூல்களைப் பயன்படுத்தி யூத பெண்கள் தங்கள் வீட்டின் ஆண்களுக்கு தொங்கல்களைச் செய்வார்கள். 12 கோத்திரங்களும் தங்களுக்கு என்று பிரத்தியேக முறையில் தொங்கல்களைப் பின்னிக் கொள்ளுவார்கள். இந்தத் தொங்கல்களில் இருக்கும் பின்னலின் அமைப்பை வைத்தே, அது அணிந்திருக்கும் ஆண், எந்த கோத்திரம் என்று அடையாளம் கண்டுவிட முடியும்.

இப்போது மல்கியா 4:2-லிருக்கும் செட்டைகளின் கீழ் ஆரோக்கியமென்றால் மேசியாவின் உடையின் கீழ் ஆரோக்கியம் என்பதுதான் பொருள். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்திகளைக் கேட்ட மக்கள் பெரும் திரளாய்க் கூடியிருந்தார்கள். சமுதாயக் கட்டுப்பாடுகளை மீறி இயேசுவை அவள் நெருங்கினாள். ஆனாலும் மனதின் நெருடல்கள், அவளைத் தடுத்துக் கொண்டே இருந்தது. பெரும் கூட்டம் நெருக்கித் தள்ளியது. அவர் அவளைக் கடந்துப் போகும் வாய்ப்பை தவறவிட்டால் இனி மரணம் தான் என்று ஒரு கணம் யோசித்தவுடன், மரத்துப்போன அவள் கைகள் அவருடைய உடையின் ஓரத்திலிருக்கும் தொங்கலைத் தொட்டது. அவருடைய படைப்பின் ஆற்றல், அவரிலிருந்து அவளுக்குள் பாய்ந்தது. அந்த நொடி அவளுடைய உடல் ஆரோக்கியம் அடைந்தாலும், அவளுடைய மனதின் படபடப்பு குறையவில்லை. சுகம் கிடைத்த மகிழ்ச்சியில் அவள் துள்ளி குதிக்காமல், கூட்டத்திற்குள் மறைந்திருந்தாள். ஒரு ஆணின் உடையின் ஓரத்திலிருக்கும் தொங்கலை தொடுவது தகாத செயல். அந்த நபரின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தான் அதைத் தொடுவதற்கு உரிமையிருக்கிறது. கூட்ட நெரிசலில் அவரைத் தொட நினைத்தவளுக்கு கையில் பிடிபட்டது அவருடைய உடையின் தொங்கல் மட்டுமே. இதன் காரணமாகவே ஆண்டவராகிய இயேசு கேட்டார், என்னைத் தொட்டது யார்? என்று. தன்னை அவர் கண்டுபிடித்து விட்டார் என்பதை அறிந்துக் கொண்ட அவள், அப்பொழுதுதான் தன்னைச்சுற்றியிருந்தமக்களுக்குதான்சுகம்அடைந்ததையும், தன்னுடைய பெரும்பாடு நின்றுப்போனதையும் சொன்னாள். உடனே இயேசு அவளைப் பார்த்து மகளே! திடன் கொள். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று சொன்னார். அவர் அவளை மகளே என்று கூப்பிட்டு, களங்கமில்லாத உன்னத சுகத்தை அவளுக்கு வாய்க்கச் செய்தார்.

**அன்பு தம்பி, தங்கையே இன்றும் உடல் ரீதியாக பெரும் அவதிகளுடன் மக்கள் சுகத்தைத் தேடி அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். முழு மனுக்குலத்திற்கும் பரம வைத்தியராகிய இயேசு கிறிஸ்து, இந்த ஊழியத்தைச் செய்ய உன்னைத்தான் அழைக்கிறார். அவரின் அழைப்பை ஏற்று, கலாச்சாரம் தாண்டி இந்த பணியைச் செய்ய வருவாயா?**

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. M. Jerome Stanley



# தலைமைத்துவம்

வெற்றியுள்ள தலைமைத்துவத்தின் ஏழு கொள்கைகளை வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

**கொள்கை: 1 - தலைமைத்துவம் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதில் துவங்குகிறது (LEADERSHIP BEGINS WITH ACCEPTING RESPONSIBILITY):** ஆதியாகமத்தில் முதல் ஒரு சில அதிகாரமும், யாத்திராகமத்தில் முதல் ஒரு சில அதிகாரமும் வேறு பிரித்து படித்தால் நமக்கு எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதைப் பற்றியது. ஆதியாகமத்தில் ஆதாம் ஏவாளையும், ஏவாள் பாம்பையும் குற்றம் சாட்டுகிறார்கள். காயீன் “என் சகோதரனுக்கு நான் காவலாளியோ” என்கிறான். நோவா நீதிமான் தான், ஆனால் தன் குடும்பத்தைத் தவிர தன் காலத்தில் வேறு யாரையும் ஆதாயப்படுத்தவில்லை. ஆனால் மோசேயோ அப்படி அல்ல, ஒரு எகிப்தியன் ஒரு இஸ்ரவேலனை அடிப்பதையும், இரண்டு இஸ்ரவேலர்கள் சண்டை போடுவதையும் கண்டு தலையிடுகிறார். மீதியானில் மேய்ப்பர்கள் மத்தியில் தன் மாமன் மகளுக்கு ஆதரவாக நிற்கிறார். எகிப்திய அரண்மனையில் வளர்க்கப்பட்ட மோசே இதையெல்லாம் தவிர்த்திருக்கலாம். ஆனால் அப்படி செய்யவில்லை, பொறுப்புகளை ஏற்பதின் விளைவு தலைமுறை கடந்த தலைவனாக இன்றும் வாழ்கிறான்.

**கொள்கை: 2 - தனி மனிதனாக யாரையும் வழிநடத்த முடியாது (NO ONE CAN LEAD ALONE):** ஐந்து ஆகமத்திலும் “நல்லது“ என்று ஏழு முறை வருகிறது. ஆனால் “நல்லதல்ல“ என்று இருமுறை மட்டுமே வருகிறது. அதாவது மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல, மற்றொன்று மோசேயிடம் எத்திரோ சொன்னது என்னவெனில் “இந்த கூட்டத்தைத் தனியாக நடத்துவது நல்லதல்ல”. வனாந்தர பயணத்தில் கூட மூன்று தலைவர்கள் மோசே, ஆரோன், மிரியம். இதில் மோசே கடவுளோடும், ஆரோன் மக்களோடும், மிரியாம் பெண்களுக்கும் மற்றும் தன் இரு சகோதரர்களுக்கும் ஆதரவாக இருக்கிறாள். ஒரு யூத ரபி, இஸ்ரவேலர்களுக்கு பாலைவனத்தில் தடையில்லாமல் தண்ணீர் கிடைக்க வழி செய்தவள் மிரியாம் என்று எழுதுகிறார். தலைமைத்துவ பண்புகள் மக்கள் தலைவர்கள், மதத் தலைவர்கள், தீர்க்கதரிசிகள் என பல வகைப்படுகிறது. ஒரு பண்டிதர் யூத மக்களைத் தனிமனிதனாக யாராலும் வழிநடத்த முடியாது என்கிறார்.

**கொள்கை:3 - தலைமைத்துவம் இலக்கையடையும் தரிசனம் கொண்டது (LEADERSHIP ABOUT FUTURE):** மோசே இஸ்ரவேலை வழி நடத்தும் முன் “முட்செடி” தரிசனம் தேவைப்பட்டது. தலைமையேற்பதில் எதிர்கால இலக்கு ஒன்று, அது கானான். இதை உபாகமம் முழுவதும் நாம் காணலாம். வாக்குத்தத்த பூமியை அடைய வேதவாக்கியத்தின் முக்கியத்துவம், இலக்கையடைய உள்ள சவால்கள் இவற்றைத் தெளிவுப்படுத்துவதைப் பார்க்கமுடிகிறது.

**கொள்கை: 4 - தலைவன் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் (LEADERS LEARN):** யோசுவாவுக்கு கட்டளையிடப்பட்டது நமக்கு நன்றாக தெரியும். இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் எப்பொழுதும் உன் உதட்டில் இருக்கக்கடவது. இரவும் பகலும் அதை தியானம் செய் என்பதே. தலைவனுக்கு நிலையான ஆய்வு, படிப்பு இவைகள் முக்கியம். இஸ்ரவேல் தேசத்தின் விடுதலைக்கான முக்கிய நபர்களில் ஒருவர் டேவிட் பென்கூரியன், இவர் வீட்டில் இருபதாயிரம் புத்தகங்கள் இருந்ததாக சொல்லுகிறார்கள். அரசியல் தலைவனுக்கும், அரசியல்வாதிக்கும் இடையில் ஒரே வித்தியாசம் படிப்பில் தான் இருக்கிறது. அரசியல் தலைவன் தலைமுறைகளுக்கு மேலாக பேசப்படுகிறான். அரசியல்வாதி தன் காலத்தில் மட்டும் பேசப்படுகிறான்.

**கொள்கை: 5 - தலைமைத்துவம் தன் மக்களை நம்ப வேண்டும் (LEADERSHIP MEANS BELIEVING IN THE PEOPLE YOU LEAD):** தலைமைத்துவத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று தலைவன் தன் மக்களை நம்ப வேண்டும். மீண்டும் பாருங்கள், மோசே இந்த ஜனங்கள் என்னை நம்ப மாட்டார்கள் என்கிறார். ஆனால் கர்த்தர் இவர்கள் கடவுளின் பிள்ளைகள், கடைசியாக என்னைத்தான் நம்ப மாட்டார்கள் என்று சொல்லுகிறார். மோசேயின் கையில் குஷ்டரோகம் வந்தது ஒரு அடையாளம். மேலும் கர்த்தருடைய ஜனங்களை நம்பாததற்கான தண்டனை என்று ஒரு ஆய்வு குறிப்பிடுகிறது. தலைமைத்துவத்தில் இரண்டு கூறுகள் இருக்கிறது. ஒன்று அதிகாரம், மற்றொன்று செல்வாக்கு. அதிகாரம் அரசர்களிடமிருந்தது, செல்வாக்கு ஆன்மீகத் தலைவர்களிடமிருந்தது. யூதர்கள் அரசர்களைக் காட்டிலும் தீர்க்கதரிசிகளை ஏற்றுக் கொண்டதற்கு காரணம் செல்வாக்கை அவர்கள் நம்பினார்கள். அதிகாரத்திற்கு ஒரு நாளும் அடிபணிய மாட்டார்கள். உங்களுக்கு அதிகாரம் வேண்டுமா? செல்வாக்கு வேண்டுமா?

**கொள்கை: 6 - தலைவன் என்பவன் மக்களோடு மக்களுக்கு முன்பாக செல்ல வேண்டும் (LEADERSHIP INVOLVES A SENSE OF TIMING AND PACE):** ஒரு தலைவன் அதிவேகமாக முன்னே சென்றால், மக்கள் சோர்வடைந்து விடுவார்கள். அவனுக்கு கொடுக்கப்பட்ட பணியை தன் காலத்தில் முடிப்பது அல்ல, மக்களோடு சேர்ந்து முடிப்பதாகும். மோசே கடவுளிடம் சொல்லும் பொழுது, கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப் போல் இராதபடிக்கு, இந்த சபைக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கு, அவர்களை போகவும் வரவும் பண்ணும்படியாக மாம்சமான யாவருடைய தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும் என்கிறான்.

**கொள்கை: 7 - தலைமைத்துவம் என்பது மன அழுத்தம் மற்றும் உணர்வு ரீதியானது (LEADERSHIP IS STRESSFUL AND EMOTIONALLY DEMANDING):** மோசேயை எடுத்துக் கொள்வோம், அவன் ஒரு கட்டத்தில் நானா இவர்களைப் பெற்றேன், நானா இவர்களைக் கருவுற்றேன் என்று சொல்லும் அளவிற்கு தன்னைக் காட்டுகிறான். ஜனங்கள் பாலைவன பயணத்தில் அவர்களது கஷ்டத்திற்கு காரணம் மோசே என்று நம்பினார்கள். எனவே எதிர்த்தார்கள், முறுமுறுத்தார்கள். ஒரு தலைவன் இதையெல்லாம் சந்திக்கத்தான் வேண்டும், விமர்சனங்கள் வரும் நேர்மறையாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நிர்வாகக் கோட்பாடுகள்/ குழு நிர்வாகம்/ அணுகுமுறை / மன அழுத்தம்/ நேர மேலாண்மை / வெற்றிகரமான வாழ்க்கைக் கொள்கைகள் / பணம் கையாளுதல்/ பணி மேலாண்மை / SOFT SKILLS / சைக்காலஜி போன்ற காரியங்களை வேதத்தின் அடிப்படையிலே இந்தப் பகுதியில் நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ளலாம்.

Mr. Isaac Kamalesh

# நியாயப்பிரமாணம் மற்றும் கிருபையின் பிரமாணம்
## (LAW OF MOSES & GRACE OF JESUS)

மனிதர்கள் கடவுளோடும், சக மனிதர்களோடும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வதற்காக கொடுக்கப்பட்டதே மோசேயின் நியாயப்பிரமாணங்கள். ஆரம்பத்தில் தேவன் பேசிச் சொல்லிய வார்த்தைகள், பின்பு எழுத்து வடிவமாக இரண்டு கற்பலகைகளில் கொடுக்கப்பட்டது (ORAL TRADITION TURN TO WRITTEN TRADITION).

உயிரற்ற கல்லில் எழுதப்பட்ட கற்பனைத் தொகுப்பும், உயிருள்ள கடவுளின் அன்பும் வேறுபட்டது. வாழ்வதற்கும், எளிமையாக இருப்பதற்கும் வித்தியாசமுண்டு. கிறிஸ்து வெறுமனே கடவுளால் அனுப்பப்பட்ட மனிதர் அல்ல, அவர் மனித வடிவில் வந்த படைப்பாளர். அவரை நியாயப்பிரமாணத்தைப் பெற்றுத்தந்த மோசேயோடு ஒப்பிட முடியாது. ஏனென்றால் மோசேயின் சட்டம் அனைத்தும் கிறிஸ்துவையும், அவரது பரிகாரத்தையும் பற்றிய நிழலாட்டமாய் குறிப்பிடப்பட்டிருந்தது.

நியாயப்பிரமாணத்தின் காலம் யாத்திராகமம் 20-ல் தொடங்கி அப்போஸ்தலர் 1-ல் முடிகிறது. அப்போஸ்தலர் 2:47-ல் புதிய ஏற்பாட்டு சபை உதித்தது. அன்றிலிருந்து கிருபையின் காலத்துக்கான உபதேசங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது (ரோமர் 10:4, 6:14). கிறிஸ்துவின் நற்செய்தி கிருபையாக மாற்றம் பெற்றது. அது மோசேயின் நியாயப்பிரமாணத்தை விட பெரியது.

- மோசேயின் நியாயப்பிரமாணம் கிறிஸ்துவின் சுவிசேஷங்கள்.
- மாறுபட்ட இஸ்ரவேலர்களின் மறுபக்கம் நியாயப்பிரமாணம்.
- மனந்திரும்பி மாற்றம் பெற்ற விசுவாசிகளின் மறுபக்கம், கிருபையினால் கிடைக்கும் இரட்சிப்பு அல்லது மீட்பு.

| LAWS OF MOSES | GRACE OF GOD |
|---|---|
| மோசேயால் சீனாய் மலையில் பெறப்பட்டது. | இயேசுவால் கொல்கொதா மலையில் நிறைவேற்றப்பட்டது. |
| இது கிருபையின் பிரமாணத்திற்கு அடித்தளமானது (ரோமர் 8:13). | இது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலானது (மத்தேயு 5:17) |
| மாம்சத்தில் நிறைவேற்ற பலவீனமாக இருந்தது | இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தால் நிறைவேற்ற எளிமையாக இருக்கிறது. |
| மனிதனின் பாவ வாழ்வை எடுத்துரைத்து நீதியைச் செய்ய வேண்டியதைக் குறித்து எடுத்துரைத்தது. | மனிதன் தன் பாவ வாழ்வை உணர்ந்து மன்னிப்பைப் பெறுவதினால் நீதிமான் ஆக்கப்படுவதைக் குறிக்கிறது. |
| நியாயப்பிரமாணத்தின் நீதி எருசலேமிலே வழிபட அழைத்தது. | முழு இருதயத்தோடு எவ்விடங்களிலும் தொழுது கொள்ள அழைப்பு கொடுக்கிறது (யோவான் 4:23). |
| பாவ நிவர்த்தி பெற பண்டிகைக் காலம் வரை காத்திருக்க வேண்டும். | மனந்திரும்பி பாவமன்னிப்புப் பெற தாமதமின்றி அழைப்பு கொடுக்கிறது. |
| பாவத்தைப் பற்றிய அறிவைக் கொடுக்கிறது. (யாத்திராகமம் 32:33) | பாவத்திலிருந்து விடுதலை வாழ்வைத் தரும் மீட்பைப் பற்றியது (கொலோசெயர் 2:14) |
| சட்டத்திற்குட்பட்ட கீழ்ப்படிதலை எதிர்பார்க்கும். | அன்பினால் ஏற்படும் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறது. |
| நாம் செய்ய வேண்டியதையும், செய்யக்கூடாததையும் பட்டியலிட்டு காண்பிக்கிறது. | நாம் செய்ய முடியாததை நமக்காக கிறிஸ்து செய்து நிறைவேற்றியதைக் காண்பிக்கிறது. |
| நம்மை நாமே தற்காத்துக் கொள்ளும் சுய முயற்சியாகும். | விழுந்துபோன நம்மை தூக்கி விட இரட்சகர் தேவை என்பதை உணர்த்தும் விசுவாச முயற்சியாகும். |

நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிறதே (கலாத்தியர் 3:11). ஆமென்!

Rev. Daniel Gnanapragasam



# பறைசாற்றும் ஊழியம்

Mr. Israel Nathaniel Edward

'ஊழியம்' (கிரேக்க மொழியில் Diakonia) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவை செய்வது என்று பொருள். 1 பேதுரு 4:10 'கிறிஸ்தவ ஊழியம்' என்றால் என்ன என புரிந்துகொள்வதற்கு துணைசெய்யும் முக்கிய வசனம் ஆகும் - அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவொருக்கொருவர் உதவி செய்யுங்கள். இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரத்தில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கி.பி. 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். பல்வேறு ஊழியங்களை ஆராய இருக்கிறோம். அதன் மூலம், ஒரு ஊழியத்தின் எல்லை இதுவரை தான் என நாம் வரையறுக்க முடியாது என்பதையும், ஒரு ஊழியம் மற்றொரு ஊழியத்தோடு சேர்ந்து நிகழ்வதையும், மற்றொரு ஊழியத்தை பூர்த்தி செய்வதையும் அறிந்துக்கொள்வோம்.

நாம் இந்த மாதம் **பறைசாற்றும் ஊழியத்துடன்** தொடங்குகிறோம். இது கர்த்தராகிய இயேசுவை மனுக்குலத்தின் இரட்சகராக அறிவிக்கும் ஊழியமாகும். இந்த அறிவிப்பு நடக்க வேண்டிய வழியை இயேசுவே வடிவமைத்திருப்பதை நாம் வேதத்தில் காண்கிறோம். அவர் தனது சீடர்களுக்கு அளித்த மாபெரும் கட்டளையில் 'ஆகையால், நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்' என்றார் (மத்தேயு 28:19). ஜாதிகள் (கிரேக்க மொழியில் ethnos) என்றால் 'மக்கள் கூட்டங்கள்' என பொருள்படும். எனவே, ஒவ்வொரு மக்கள் கூட்டத்தையும் நற்செய்தி அறிவிப்பதன் மூலம் 'அவருடைய போதனைகளைப் பின்பற்றுபவர்களாக' (சீஷர்களாக) ஆக்குமாறு, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மூலம் அவரைப் பின்பற்றுபவர்களாகிய நாம் கட்டளை பெற்றிருக்கிறோம் (மத்தேயு 28:20).

### நாம் என்ன அறிவிக்க வேண்டும்?

அப்போஸ்தலர்களுடைய நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பேதுரு அப்போஸ்தலனின் பிரசங்கங்கள் நமக்கு ஒரு நல்ல மாதிரியை வழங்குகின்றன. அப்போஸ்தலர் 2:22-40 வசனங்களிலிருந்து பின்வரும் உண்மைகளை நாம் அறியலாம்: முதலாவதாக, அவர் இயேசுவை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு யூதராக ஒரு சரித்திர புருஷனாக காண்பிக்கிறார். பின்னர் அவர், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் நமது பாவமன்னிப்புக்காக நிகழ்ந்தன என விளக்குகிறார். பின்னர் அவர், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியதன் அவசியத்தையும், இயேசு கிறிஸ்துவின் பெயரால் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுதலின் அவசியத்தையும், நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியின் உதவியுடன் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதன் அவசியத்தையும் விளக்குகிறார். எனவே நமது நற்செய்தி அறிவித்தலில் இந்த அம்சங்கள் அனைத்தும் இடம்பெற வேண்டும். இயேசுவை நம்முடைய இரட்சகராக மட்டுமல்லாமல், நம்முடைய ஆண்டவராகவும் முன்வைக்க நாம் கவனமாக இருக்க வேண்டும். அப்போது தான் மக்கள் தங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்து, அவரது போதனைகளைப் பின்பற்றுவார்கள்.

### நாம் எப்படிச் செய்ய வேண்டும்?

இயேசு சொன்னார், "நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ...(மத்தேயு 28:19)". நாம் சென்று மக்களை அவர்கள் இருக்கின்ற நிலையில் சந்திக்க வேண்டும்; தேவைப்பட்டால் அவர்கள் மத்தியில் வாழ்ந்து, இயேசு கிறிஸ்துவில் மட்டுமே கிடைக்கப்பெறும் இரட்சிப்பை அறிவிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவில் மக்கள் தங்கள் நம்பிக்கையை அறிக்கை செய்யும்போது, கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பரிசுத்த வேதாகமத்தில் கற்பித்த அனைத்தையும் நாம் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். மேலும், அவர்கள் தங்களுடைய வார்த்தைகள் மற்றும் செயல்களால் சீடர்களை உருவாக்கும் சீடர்களாக வாழ கற்றுக்கொடுக்க வேண்டும்.

### கி.பி. 100க்கு முன்பு என்ன சாதிக்கப்பட்டது?

நற்செய்தியின் முதல் அறிவிப்பாளராக இயேசு வந்தார். (உண்மையில் அவரே தான் அந்த நற்செய்தி - லூக்கா 2:10-11.) அவர் தனது பரலோக வாசஸ்தலத்தை விட்டு விட்டு நம்மிடையே வாழ்ந்தார். "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபமாயிற்று" என்று அவர் பிரசங்கிக்கத் தொடங்கினார் (மத்தேயு 4:17). பின்னர், அவர் தனது சீடர்களுக்கும், பாலஸ்தீன்வாழ் மக்களுக்கும்


கடவுளின் ராஜ்யத்தைப் பற்றி பல காரியங்களைக் கற்பித்து, அவர்கள் வாழவேண்டிய வழியைக் காண்பித்தார் (மத். 5-7,13,24 அதிகாரங்கள்). இயேசு கிறிஸ்து பரமேறின பின்பு, அவருடைய அப்போஸ்தலர்களும், சீடர்களும் எல்லா இடங்களிலும் நற்செய்தியைப் பிரசங்கித்தனர் (அப்போஸ்தலர் 8:4).

பேதுரு எருசலேமிலும், ரோம சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளிலும் யூதர்களிடையே நற்செய்தியைப் பிரசங்கித்தார் (1 பேதுரு 1:1). எருசலேமுக்கு வடக்கே 1800 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பைசாண்டியத்திற்கு (இஸ்தான்புல்) நற்செய்தியைக் கொண்டுச் சென்ற முதல் நபர் அந்திரேயா ஆவார். ஆசியா மைனர், நவீன துருக்கி மற்றும் கிரீஸ் தேசத்திலும் அவர் நற்செய்தியை பிரசங்கித்தார். தோமா கிழக்கு திசையில் சென்று, பாரசீகத்தில் நற்செய்தியைப் பிரசங்கித்தார். பின்னர், அவர் நற்செய்தியைப் பஞ்சாப், கேரளா மற்றும் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்ததாக மரபுகள் கூறுகின்றன. வடஆப்பிரிக்காவிலுள்ள கார்தேஜிலும், பின்னர் ஆசியா மைனரிலும் பிலிப்பு ஒரு சக்திவாய்ந்த ஊழியத்தைச் செய்தார். மத்தேயு பாரசீகத்திலும், எத்தியோப்பியாவிலும் ஊழியம் செய்தார். பர்தொலொமேயு தோமாவுடன் இந்தியாவிற்கும், பின்னர் ஆர்மீனியா, எத்தியோப்பியா மற்றும் தெற்கு அரேபியாவிற்கும் பரவலாக மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு சிரியாவில் ஊழியம் செய்ததாகக் கருதப்படுகிறது. செலோத்தே என்னப்பட்ட சீமோன் பாரசீகத்தில் ஊழியம் செய்தார். ததேயு நற்செய்தியை தற்போது நவீன துருக்கியில் உள்ள வடக்கு மெசப்பொத்தேமியாவில் உள்ள எடெசா என்ற நகரத்திற்கு எடுத்துச் சென்றார். மத்தியா அந்திரேயாவுடன் சிரியாவுக்குச் சென்றார். எபேசு பகுதியில் திருச்சபை மூப்பராக யோவான் இருந்தார். 90ம் ஆண்டுகளில் ரோம அரசன் டொமிஷியனின் துன்புறுத்துதலின் போது, அவர் பத்மோஸ் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். அங்கிருந்து அவர் புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தலை எழுதினார்.

இயேசுவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் அறிவித்ததற்காக யோவானைத் தவிர மற்ற அனைத்து அப்போஸ்தலர்களும் கொல்லப்பட்டனர். யோவான் மாத்திரம் வயதுமூப்பினால் இயற்கையான மரணத்தைத் தழுவியதாகக் கருதப்படுகிறது. இருப்பினும், ஒரு ஆரம்பகால லத்தீன் பாரம்பரியம் அவர் ரோம் நகரில் கொதிக்கும் எண்ணெயில் வீசப்பட்டும் காயமின்றி தப்பியதாக கூறுகிறது.

அப்போஸ்தலர் எல்லோரிலும் மிகச் சிறியவர் என்று தன்னை அழைத்துக்கொண்ட பவுல், எருசலேம் தொடங்கி, நவீன க்ரோஏஷியாவில் உள்ள இல்லிரிக்கம் வரை மத்தியதரைக் கடல் சார்ந்த பிராந்தியத்தில் நற்செய்தியைப் பரப்பினார். பேரரசர் நீரோவினால் ஏற்பட்ட துன்புறுத்துதலின்போது, கிபி 66ஆம் ஆண்டில் ரோமர்களால் அவர் தலைதுண்டிக்கப்பட்டார். 20 ஆண்டுகளில் 14,000 கிலோமீட்டருக்கும் அதிகமான தூரத்தை உள்ளடக்கிய அவரது மூன்று மிஷனெரிப் பயணங்கள் அப்போஸ்தலர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.




எனவே, முதல் நூற்றாண்டின் இறுதிக்குள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் திருச்சபைகள் நாட்டப்பட்டன.

### இப்போது எஞ்சியிருக்கும் பணி என்ன?

ஒவ்வொரு மக்கள் கூட்டத்தையும் சந்திக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள பல மக்கள் கூட்டங்கள் சந்திக்கப்பட்டிருந்தாலும், ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் பெரும்பகுதிக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி இன்னும் சொல்லப்படவில்லை என்பதையே மேலே உள்ள வரைபடம் தெளிவாகக் காட்டுகிறது. ஜோஷுவா ப்ரோஜெக்ட் (HTTPS://JOSHUAPROJECT.NET) இந்தியாவின் 89.8% மக்கள் கூட்டங்களை (அதாவது 2272 மக்கள் கூட்டங்களில் 2041-ஐ) 'சந்திக்கப்படாத' பிரிவின் கீழ் வைக்கிறது. அதாவது இன்றுவரை அவர்கள் ஒரு அர்த்தமுள்ள முறையில் நற்செய்தியைக் கேட்கவில்லை என்பதே யதார்த்தமான உண்மை.

### நாம் என்ன செய்ய வேண்டும்?

இதற்கு பதில் எளிமையானதும், நேரடியானதும் கூட - நீங்கள் உங்களை இயேசு கிறிஸ்துவின் சீடராக கருதுவீர்களானால், இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து, அருகிலோ அல்லது தூரத்திலோ வாழும் சந்திக்கப்படாதவர்களைச் சந்திக்க வேண்டும். நம்முடைய அன்பான இரட்சகரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களா? மிஷனெரிப்பணி செய்ய முன்வருவீர்களா?

**மனிதர்கள் கூட்டத்தைத் தேடியே செல்வோர்**
**தேவனின் பிரியர்களே, பரந்த இத்தேசம்**
**இயேசுவைக் கண்டால்**
**எத்தனை நன்மை பெறும்!**
**- மா. பேட்ரிக் ஜாஷ்வா**




இந்த புதிய ஆண்டில் வாசற்படி என்ற தலைப்பில் ஒரு புதிய கட்டுரையின் மூலம் ஒரு காரியத்தை கற்றுக் கொள்ளப் போகிறோம். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பார்கள். நமது வேதாகமத்தில் இந்த வாசற்படியை குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாசற்படியில் இருந்து கதவைத் தட்டுவதை பார்க்கிறோம். இந்த மாதம் அந்த தலைப்பில் பாவம் படுத்திருக்கும் என்பதைக் குறித்து ஆதியாகமம் 4:7-லிருந்து தியானிக்க இருக்கிறோம்.

இதைச் சிறப்பாக செய்வதற்கு நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய நான்கு விதமான பூக்களை உங்கள் முன் வைக்கிறேன். 1.அழைப்பு, 2.வெறுப்பு, 3. பொறுப்பு, 4.சிறப்பு. கட்டுரையின் கருப்பொருள்: "வாசற்படி", கருப்பொருளின் கருத்து: கவனம், கருப்பொருள் வசனம்: "நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்" (ஆதியாகமம். 4:7)

**1. அழைப்பு – "நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ?" (ஆதி. 4:7a).**

நாம் அனைவரும் நம்முடைய வாழ்வு சிறப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அதில் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்பதை அறியாமலிருக்கிறோம். அதற்காகவே தேவன் ஒரு அழைப்பை கொடுக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட மேன்மையான பொறுப்பு நன்மை செய்வது. நன்மை என்ற உடனே நம் நினைவிற்கு வர வேண்டியது, நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்த கிறிஸ்து மட்டுமே. மற்றவர்களுக்கு நாம் செய்கிற உதவி ஆண்டவருக்கு செய்கிறோம். அநேக நேரங்களில் நன்மை செய்வோம், ஆனால் சரியானதைச் செய்கிறோமா? சரியான படி செய்கிறோமா? என்பதை நிதானிக்க அழைக்கிறோம். "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" என்று வேதத்தில் வாசிக்கிறோம். கொடுப்பதால் யாரும் ஏழையாகிவிடுவதில்லை என்று ஆன் பிராங்க் தனது கூற்றில் கூறுகிறார். நீதிமொழிகள் 14:31-ல் "தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; தரித்திரனுக்குத் தயைசெய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான்". கடவுளுக்கு உங்கள் பணம் தேவையில்லை, ஆனால் நீங்கள் பணம் தேவைப்படும் ஏழைகளுக்கு கொடுங்கள், கடவுள் அதைப் பெறுகிறார் என்று புனித அகஸ்டின் தனது கூற்றில் கூறுகிறார். "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்" (மத்தேயு 25:35, 36). அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்தேயு 25:34) என்று நன்மை செய்பவர்களுக்காக தேவன் ஆதி முதல் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற சந்தோஷத்தில் பிரவேசிப்போம்.

**2. வெறுப்பு – "நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" (ஆதி. 4:7b).**

பாவம் நமது வாசற்படியில் படுத்திருக்கும் என்பது அனுதினமும் நாம் பாவ உலகத்திற்குள் செல்கிறோம். பாவத்தை விட்டு, பாவத்தை தாண்டி செய்ய வேண்டிய அநேக நன்மைகளைப் பரிசுத்த வேதம் நமக்கு போதிக்கிறது. பாவம் இரண்டு வகைப்படும். ஒன்று நாம் செய்ய வேண்டியதை செய்யாமல் இருப்பது (sin of Commision). அநேக கட்டளைகளை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். அதை செய்யாமல் இருப்பது பாவம். இரண்டாவது நாம் செய்யக்கூடாது என்று அநேகக் காரியங்களை நமக்கு போதிக்கிறது. அதை செய்வதும் பாவம் (sin of omission). பரிசுத்த வேதாகமம் நமக்கு பாவத்தின் மூன்று தன்மைகளான பாவம், அக்கிரமம், மீறுதல் போன்றவற்றை நினைவூட்டுகிறது. வேதாகமத்தில் மொத்தம் 613 கட்டளைகளுண்டு. அதில் 365 செய் என்றும், 248 செய்யாதே என்றும் எழுதி இருக்கிறது. இவைகளை மீறுகிறதே மீறுதல். செய்யக்கூடியதை செய்யாததும், செய்யக்கூடாததை செய்வதும் பாவமாகும். அக்கிரமம் என்பதென்னவென்றால், தேவ சாயலில் உருவாக்கப்பட்ட நீங்களும், நானும் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவர் சித்தத்தைச் செய்யத் தவறும் போது, அவருடைய கீழ்படிதலிலிருந்து விலகி அக்கிரம் செய்கிறவர்களாகிறோம்.

**3. பொறுப்பு – "அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும்" (ஆதி. 4:7b).**

நன்மையும், கிருபையும் நம்மைப் பற்றியிருக்க வேண்டும். நம்முடைய அனைத்து செயல்பாடுகளும் இதற்கு இணையாக செல்ல வேண்டும். "என் ஆசையெல்லாம் நீர்தானையா" என்று நமது ஆசைகள் அனைத்தையும் அவரிடம் கொடுக்க வேண்டும். அவருடைய ஆசையையும், இதயத்துடிப்பையும் நம்முடைய ஆசையாக மாற்ற வேண்டும். அப்படி செயல்படுவோர் வாசலில் பாவம் படுத்திறாது.

**4. சிறப்பு – "நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்" (ஆதி. 4:7c).**

தீமை உன்னை ஆளவிடாமல், நன்மை நம்மை ஆள வேண்டும். நமக்கு நாமே ஆவிக்குரியத் திட்டங்களை அமைப்பதும், அதற்கு கீழ்ப்படிவதும், நம் வாழ்வை அர்ப்பணிப்பதும் மிக முக்கியம்.

இந்த 4 பூக்களும் நம் வாழ்வில் அனுதினமும் வாடாமல், மனம், நிறம், அழகு போன்றவைகள் மாறாமல் இருக்க ஜெபத்தோடு கிறிஸ்துவுக்காக பூத்து மணம் வீசுவோம். இந்த புதிய ஆண்டில் ஒரு தீர்மானம் எடுப்போம். தேவைப்படுவோருக்கு கொடுத்து நன்மைச் செய்வோம். கர்த்தர்தாமே நமக்கு உதவி செய்வாராக.

Mr. SM Cymer Selwyn

# ஆட்டுவாசலைக் கட்டுவோம் வா...

ஆரம்ப வரிகள்...

நெகேமியாவின் புத்தகம் தனது தாய் நாட்டின் அழிவைக் குறித்து கேட்கும் ஒரு எளிய மனிதனுக்கு ஏற்படும் கலக்கத்தை விளக்குகின்றது. அவருடைய தேசத்திலிருந்து வந்த ஒரு குழுவினர் அப்போதிருந்த உண்மை நிலையைத் தெரிவிக்கின்றனர். அதைக் கேட்ட நெகேமியா சஞ்சலப்படுவதோடு மட்டுமல்லாமல் தன் இதயம் உடைவதையும் உணருகின்றார்.

சுவரின் சீரமைப்புக்கான உண்மைத்தன்மை: எருசலேம் நகரத்தை பாதுகாக்கும் உடைந்த சுவரை மறுகட்டமைப்பதற்கு ஒரு பெரிய சவாலை இந்த புத்தகம் அறிவிக்கின்றது. இந்த செய்தியை நெகேமியா கேட்ட மாத்திரத்தில், அவருக்கு ஒரு உந்துதல் ஏற்பட்டு கடவுளுடைய பணியில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகின்றார். அதன் காரணங்கள் என்ன? அது அவருடைய நாட்டு மக்கள், அவருடைய தேசம் மற்றும் அங்கு கட்டபட்டிருக்கும் கடவுளின் ஆலயமாகும் (நெகேமியா 1:3). எருசலேமின் உடைந்த அலங்கத்தை மறுக்கட்டமைப்பதின் உண்மைத்தன்மையைப் புரிந்துக் கொண்டு, அதற்கேற்ற விதமாய்ச் செயல்படுகின்றார். மேலும், எருசலேம் நகரத்திற்குள் நுழைவதற்கு, அலங்கங்கள் மூலமாக ஜனங்கள் உள்ளே நுழைவதற்கும், வெளியே செல்வதற்கும், வியாபாரம், ஆலய வழிபாடுகள் சம்பந்தமான காரியங்கள் மற்றும் மக்களின் அன்றாட செயல்பாடுகளுக்கும் பத்துக்கு மேற்பட்ட வாயில்கள் உள்ளன. ஆனால் அதின் பிரதானமான நோக்கம் இஸ்ரவேல் தேசம் உண்மையான கடவுள் யெகோவாவை வணங்க வேண்டும் என்பதேயாகும். ஆகவே, முதன்மையாக நெகேமியா ஆட்டுவாசல் என்கின்ற நுழைவுவாயிலைப் சீரமைக்க தொடங்குகின்றார். அதில் ஒரு ஆவிக்குரிய முக்கியத்துவம் உள்ளது. ஆட்டுவாசல் முக்கியமாக தேவனுக்கு பலி செலுத்துவதற்கான ஆடுகள் தேவாலயத்தில் நுழைவதற்காக அமைக்கப்பட்டது. எருசலேம் நகரின் வடகிழக்கு மூலையில் இந்த ஆட்டுவாசல் அமைந்துள்ளது.

சுவரின் மறுசீரமைப்பின் உண்மைத்தன்மை: எலியாசிப் யூதர்களின் பிரதான ஆசாரியன். இவர், உடன் ஆசாரியர்களின் உதவியோடு ஆட்டுவாசலின் மறுக்கட்டமைப்பில் ஈடுபடுகின்றார் என்று நெகேமியா 3:1 பதிவு செய்கிறது. யூதர்களின் பிரதான ஆசாரியர் ஏன் மறுசீரமைப்பில் ஈடுபடுகின்றார்? ஏனென்றால் தேவாலயத்தின் பலியிடும் நடைமுறைகளில் முக்கிய பங்கு பிரதான ஆசாரியருக்கே உண்டு. பலி செலுத்துதல் கடவுளோடு உறவை ஏற்படுத்தி ஒரு தனி நபரின் ஆவிக்குரிய வாழ்வில் ஆராதனை வழியாக மறுசீரமைப்பை ஏற்படுத்துகின்றது.

மதிலின் உண்மையான சீரமைப்பு, ஆவிக்குரிய முக்கியத்துவம்: ஆட்டுவாசல், பலியிடப்படும் மிருகமான ஆடு தேவாலயத்திற்குள் நுழைய அனுமதிக்கிறது. பலி செலுத்துவதின் அம்சம் என்னவென்றால், ஒரு தனிநபர் தனது பாவங்களுக்காக சிருஷ்டிகராம் கடவுளுக்கு முன்பாக பலி செலுத்தி, பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்று கடவுளோடு ஏற்பட்ட முறிந்த உறவை மறுசீரமைத்து அவனுடைய / அவளுடைய ஆவிக்குரிய வாழ்வை புதுப்பித்தலைக் குறிக்கின்றது. அதுதான் மீட்பின் அனுபவம் என்று புதிய ஏற்பாடு முக்கியத்துவப்படுத்துகின்றது. எபிரெயர் 9:22-ல் "இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை" என்று கூறுகின்றது. எந்த ஒரு மிருகத்தின் ரத்தமும் அல்ல, மாறாகக் கரையற்ற ஒரு மனிதனின் இரத்தத்தின் வழியாக. சத்திய வேதாகமம் முக்கியப்படுத்தி கூறுகின்றது என்னவென்றால் "அவருடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கின்றது" (1யோவான் 1:9).

ஆகையால் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் (நமது நாட்டில்) மீட்பின் அனுபவம் தேவைப்படுகிறது. இதற்கு ஒரே பதில் இயேசு கிறிஸ்துவே. அது முன்னதாகவே நமக்கு இலவசமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதிலுள்ள சவால் என்னவென்றால் யாராவது ஒருவர் அவர்களிடம் சென்று இயேசு கிறிஸ்துவே கடவுள் என்றும், அவரே உலக மீட்பர் என்றும் அறிவிக்க வேண்டும். மேலும், ஆட்டு வாசல் வழியாக உள்ளே நுழையும் இயேசுவின் ஊழியத்தின் வெவ்வேறு தன்மைகளின் முக்கியத்துவத்தை ஆட்டுவாசல் வலியுறுத்துகின்றது. அது இயேசுவே தேவ ஆட்டுக்குட்டி என்று அறிவிக்கின்றது. நெகேமியா அழிவைக் கேட்டறிந்தார். அவர் உடைந்த மதிலின் சீரமைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பிரதான ஆசாரியரும், அவருடைய உதவியாளரும் கூட ஆட்டுவாசல் சீரமைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அது தங்கள் நாடு மற்றும் மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் அடையாள இணைப்பாகும்.

உனக்கு ஓர் அழைப்பு: சக இந்தியர்களுக்கு இயேசு கிறிஸ்துவே கர்த்தர் என்றும், நம்மை இரட்சிப்பவர் என்றும் அறிமுகபடுத்துவதில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஈடுபட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் இயேசு கிறிஸ்து தான் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை புதிப்பிப்பதற்கான ஒரே வழி என்று இந்த இயக்கம் அறிவிக்கின்றது. இந்த இயக்கத்தின் கட்டளை "போ அல்லது அனுப்பு" என்பதாகும். கலாச்சாரம் கடந்து பணி செய்யும் மிஷனெரியாக நீங்கள் செல்லுங்கள், அல்லது உங்கள் சார்பாக வேறு ஒருவரை அனுப்புங்கள். மற்றும் ஒரு ஜெப வீரராக ஜெபத்தில் தரித்திருங்கள்.

உன் பதில் என்ன? நமது தேச மக்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் மறுகட்டமைப்புக்காக மற்றவர்களை அழைக்க உனக்கு ஒரு வாய்ப்பு. நீங்கள் பிரதான ஆசாரியனாக ஆட்டு வாசலைச் சீரமைக்க ஆண்டவர் உங்களை அழைக்கிறார்.

இளைஞனே, யுவதியே! நீ எழுந்திரு! மக்களை கிறிஸ்துவிடம் கொண்டு வரும் ஒரு மிஷனெரியாக உன்னை அழைக்கிறேன். உனது திறமைகள் மற்றும் கல்வி சக இந்தியனைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரத் தேவைப்படுகிறது. உன் பதில் என்ன? ஆட்டுவாசலை சீரமைக்க வருவாயா!

> "இந்தத் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் தான், உலகிலுள்ள இந்தத் தலைமுறை ஆத்துமாக்களுக்கு பொறுப்பு" - கீத் கிரீன்

Rev. Prabakara Sarathy










நமது இலக்கு

**1000**

மிஷனெரிகளை

பணியமர்த்துவது